சுதேசமித்திரன்

6-6-43

விலை 4 அணா

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

ஒரு புராதன வைத்தியம்
இவ்விதமாகவே நல்ல செய்தி
கள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ்
கிரைப் வாட்டர் குழந்தைகளை
நன்கு பாதுகாக்கிறது
IMPORTANT TO MOTHERS
WOODWARD'S
GRIPE WATER
keeps baby well
1-WW 111-111
W. WOODWARD LTD. LONDON, ENGLAND

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

ஜாதகம்! ஆருடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt- Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

'மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

8 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ்:
வால்டேர், ஆர். எஸ்.

லக்ஷ்மி & கோ.,
2/135, பிராட்வே, மதராஸ்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்

(தங்கம் சேர்ந்தது.)

அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7.

மஹாபில்வாதி லேகியம்

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரி கவசம்

வியாதி, மனோவிசாரம், தரித்திரம் இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது இதில் வசீகரண மூலிகை பிரதி ஸரஸ்வத்ரம், ஸ்ரீதன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)

சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்

ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
“தபோநிதி” தியாகராயநகர், மதராஸ் 17.

டெலிபோன்: 2246. தந்தி : கிளாவர் பீ



லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமது நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தர மான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்,
ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

பாத்ருடுவின் “பால சஞ்சீவினி”
(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

தந்தி விலாசம் : “சுகந்தம்.”

சுக வாழ்விற்கு சுகந்தம் நிறைந்த
“3001” ஜவ்வாது பத்திகள்
இன்பம் தரும் இனிய மணம் நிறைந்த
“301” ஜவ்வாது பத்திகள்
நறுமணத்திற்கு நற்கியாதி வாய்ந்த
“31” ஜவ்வாது பத்திகள்
ஆரோக்கிய வாழ்விற்கு
“ஆசாத்” பாத்கட் பத்திகள் &
“ஆசாத் ஹிந்த்” குழாய்பத்திகள்

S. V. முருகேசன் & பிரதர்ஸ்,
நெ. 39. லெக்ஷ்மிபுரம் 6-வது தெரு, மதுரை
பிராஞ்சு : நெ. 4 அப்பாஜிராவ் தெரு, பெங்களூர் சிடி.
டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும்,சில்லரையாகவும் கிடைக்கும்

***M. R.* பார்த்தசாரதி ஐயங்கார்,**
28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

கல்யாணத்திற்கு வேண்டிய பட்டு ஜவுளி திநுசுகள் ஏராளமான டிசைன்களில் சரஸமான விலைகளில் கிடைக்குமிடம்

R. S. E.

ராதா ஸில்க் எம்போரியம்

(போன் : 84188.)

ஸன்னதி தெரு — மயிலாப்பூர் — மதராஸ்.

R. K. ராதாகிருஷ்ண செட்டியார்,
R. K. சாரநாத செட்டியார்,
புரொப்ரைட்டர்ஸ்.

யாரெல்லாம் ஆங்கிலம் கற்கலாம்

1. ஆங்கில எழுத்துகூட தெரியாத ஆண்களும், பெண்களும்.
2. பாடசாலைகளில் முறையே சென்று பயில முடியாத சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும்.
3. பாடசாலைக் கல்வி சிறிது கற்று நிறுத்தியவர்களுக்கும்.
4. ஆங்கிலப்படிப்பு இல்லா குறையால் உத்தியோகத்தில் முன்னேற்றம் கிடையாது தத்தளிக்கும் அரசாங்க சேவகர்களும், பள்ளி ஆசிரியர்களும்.

தவிரவும், எஸ். எஸ். எல். ஸி. அல்லது மெட்ருஸ் மெட்ரிகுலேஷன் ஆகிய பரீட்சைகளில் தேறவியலாது கலாசாலைப் படிப்பு தொடர எண்ணியும் அது முடியாமல் நின்று அல்லல் படுபவரும், எமது ஸ்தாபனம் வழி அக்குறையை அகற்றி கலாசாலை பிரவேசனம் பெற்று பி. ஏ., எம். ஏ., முதலிய பட்டங்கள் பெற்று விளங்கலாம்.

எவர்க்கும் தத்தம் இல்லத்திலிருந்தே தங்கள் பிற தொழில்களுக்கு இடையூறின்றி குறைந்த காலத்தில் விரும்பிய ஆங்கிலறிவு பெற்றுவரலாம். இன்று ஆங்கில எழுத்துகூடத் தெரியாத ஒருவருக்கு ஒரே வருடத்தில் நான்காவது பாரத்தின் ஆங்கிலறிவு கிடைக்கப்பெறுகின்றது. தொடர்ந்து மூன்று வருடங்கள் கற்பதாயின் மெட்ருஸ் மெட்ரிகுலேஷன் பரீட்சை தேற முடிகின்றது. கல்வி முழுவதும் தபால் மூலமாக கற்பிக்கப்படும்.

விவரங்களுக்கு தான் படித்த வகுப்பு, தன் வயது முதலியன குறிப்பிட்டு தன் தெளிவான மேல் விலாசம் காண்பித்து கீழ்க்காணும் விலாசத்திற்கு உடனே எழுதவும்:

E. C. School, Kythamukku, Trivandrum.

45 வருஷமாகப் புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்:

தாளக பஸ்பம்

காசம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு 7 விதமும் அஸ்திசுரம், எலும்புருக்கி (T. B.) க்ஷயரோகமும் தீருகிறது. $\frac{1}{2}$ மண்டல பஸ்பம், தாளிசபத்திரி சூரணமும் ரூ. 10.

அப்ரேக் செந்தூரம்

அடிக்கடி போகும் நீர், தாகம், வரட்சி, எலும்புறுக்கி, பவுத்திரம், நீரில் உள்ள சர்க்கரைசத்து பூரண சுகமாகிறது. $\frac{1}{2}$ மண்டலம் அனுபானத்துடன் ரூ. 15.

எவ்வித மருந்துகள் சாப்பிட்டும் தீராத கொடிய வியாதிகளுக்கு வியாதி விவரம் தெளிவாக எழுதினால் தகுந்த உயர்ந்த மருந்துகள் கொடுத்து குணப்படுத்துகிறோம்.

வைத்தியபதி

R.M. நாராயணசாமி பிள்ளை

தன்வந்திரி வைத்தியசாலை,
பழனி. (S. I.)

முக்கூடல் காந்திஜி நீர் நிலையம்

★



திருநெல்வேலி ஜில்லா முக்கூடல் கிராமம் ''கிளி'' மார்க் பீடி பாக்டரி புரொப்ரைட்டர் ஸ்ரீ D. S. ஆதிமூலம் ரூ. 6000 செலவில் இந்த ''காந்திஜி'' நீர் நிலையத்தைக் கட்டி முடித்து, 21-5-48 வெள்ளிக்கிழமையன்று பொது ஜனங்களின் உபயோகத்திற்காகத் திறந்து வைத்தார். தொட்டியில் 2000 காலன் ஜலம் நிற்கும். எட்டு குழாய்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.



சேலம் வெங்கடேசபுரம் கிளப்பால் நடத்தப்பட்ட டேபிள் டென்னிஸ் டூர்னமெண்டில் வெற்றிபெற்று மே 17-ல் பரிசு அளிக்கப்பட்ட நால்வர் சிறுவர்கள்.

(வரிசையாக இடதுபுறமிருந்து வலமாக)

1. பி. கே. கிருஷ்ணமூர்த்தி (ஜூனியர்-முதலாவது)
2. ஏ. கே. லக்ஷ்மணாச்சார் (சீனியர்-2வது)
3. எம். பி. தேசிகன் (சீனியர்-முதலாவது)
4. எஸ். எச். பார்த்தசாரதி (ஜூனியர்-2வது)

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ் கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32–க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24–க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80–க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும், தபால் செலவு ப்ரத்தியேகம்,

மானேஜர்.

" சுதேசமித்திரன் " புத்தகசாலை, மவுண்ட் ரோடு, சென்னை.

Lovely long hair

100% மருந்து பூர்வமானது; வாசனையுள்ளது, மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம் வளர உதவும்

VIJAYA CHEMICAL & TOILET WORKS
21 & 22 Suriyanarayana Chetty St,
Royapuram, Madras.

தேவி பிரஸன்ன ஆரூடம்

தாங்கள் சீல் செய்த கவரில் அனுப்பிய ஐந்து கேள்விகளுக்குச் சரியான விடைகளை உபாசன தேவியின் மகிமையால் தங்கள் கவரைத் திறக்காமலே கண்டு பிடித்து ரூபா 2 க்கு வி. பி. யில் அனுப்பப்படும்.

காயத்ரி மந்திராலயம்,
13, கொல்லர்பேட்,
பெங்களூர் ஸிடி.

கண்ணில் பூவிழுதல்

டிகான்ஸ் ஐக்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க்கணக்கானபேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்திபெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணா 12.

செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச்செவிடு காதில் இரைச்சல் மற்றும் எக்காரணத்தினாலும் எவ்வித நோயானாலும் நாலே வாரத்தில் சொஸ்தப்படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. கியாதிபெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது கியாதிபெற்ற ஹானியற்ற மூலிகைகளினால் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,
6, Panchpota, BENGAL.

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்:
" சுதேசமித்திரன் " புத்தகசாலை
மவுண்ட்ரோட், மதராஸ்.

முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை, தையல் இலை

சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S.மாணிக்கம்செட்டி கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்
மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை

வெளிவந்து விட்டது!

வாசனை பாக்குத்தூள் காலணாவுக்கு இரண்டு.

சென்னைக்கு சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை,

தயாரிப்பவர்:
மாணிக்க விலாஸ்
11 பீட், மதராஸ் 1.



ஜீனெட் ம்லாடிஸ்கா ஒரு பிரபல நாட்டியக்காரியாக விருந்தவர். இவர் இப்போது உலகத்தைத் துறந்து புத்த சன்னியாசினியாக மாற உத்தேசித்துள்ளார். புத்த பிக்ஷு லோகநாத் இலங்கை செல்லுமுன் அவருக்கு வணக்கம் செலுத்துகிறுர்.

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினுலோ வேலையினுலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம்: 1936.)

சக்தி ஆருடம்!

புகழ்பெற்ற "சக்தி பால ஜோதிடரால்" வருங்கால பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும். அண்ணுமலை யூனிவர்சிட்டி வித்யாரத்ன Prof. R. ராமானுஜாச்சாரி M.A., கூறுவது:-'தங்கள் சாஸ்திர ஆராய்ச்சியையும் எதிர்கால பலன்கள் கூறும் திறமையையும் நான் மிகவும் மெச்சுகிறேன். பலன்களில் எனக்கு மிகவும் திருப்தி' 1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. 1 வருட பலன் எழுத ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்திகவசம் ரூ. 7-8-0. வி. பி. பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும். N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

ஸ்ரீமத் பகவத் கீதை

விலை ரூ. 3—8—0
(தபாற் செலவு பிரத்யேகம்)

மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.



வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ வைகாசி௴ 24௳ ★ 1948-௵ ஜூன்௴ 6௳ No. 19

வேறு வழியில்லை.

தென்னாப்பிரிக்கத் தேர்தலில் ஸ்மட்ஸ் கட்சி தோற்று, மலான் கட்சி அதிகாரத்துக்கு வந்துவிட்டது. முதலாவதாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு இது ஒரு பேரிடி. சாம்ராஜ்யத் தொடர்பில் டாக்டர் மலான் காட்டிவந்திருக்கும் கொதிப்பு அனைவரும் அறிந்ததுதான். உடனேயே அவர் இத்தொடர்பைக் கத்தரித்து விடுவாரா என்பது பற்றி இப்போது ஊகங்கள் வெளியிடத் தேவையில்லை. ஆனால் எப்படியும் மலான் வெற்றி சாம்ராஜ்யத்தை கலகலக்கச்செய்வது திண்ணம்.

இனி தென்னாப்பிரிக்க இந்தியர் கதி என்னாகுமென்பதிலேயே நமக்கு நேரடியான திருஷ்டி. ஏற்கெனவே அவர்களுக்குள்ள சோதனை இனி இன்னும் பன்மடங்கு கடுமையாகிவிடும். மலான் கட்சியின் நிறத்திமிர் எல்லைகடந்தது. இந்தியர் விஷயத்தில் ஸ்மட்ஸ் விட்டுக்கொடுத்த அளவுகூட மிகவும் அதிகமென்பது மலான் கும்பலின் மனோபாவம். சிறிதும் தயவுதாட்சண்யமின்றி அங்குள்ள இந்தியரைப் பூண்டோடு ஒழித்துவிடவேண்டுமென்பதே இப்பிரச்னைக்கு அந்த நிறவெறியர்களின் பரிகாரம். இதைப் பகிரங்கமாகப் பறையடித்தே அவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றிருக்கின்றனர். அங்குள்ள இந்தியரை கூடியவரை வெளியேற்ற தங்களாலான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்துக்கொள்வது; அதற்குப் பிறகும் பாக்கியிருக்கக்கூடிய இந்தியர் மீது தற்போதுள்ள கட்டுப்பாடுகளை இன்னும் கடுமையாக்கி, அவர்களைத் திணறடிப்பது; இதுவே தங்கள் வேலைதிட்டம் என்பதில் மலான் கட்சி சிறிதும் சந்தேகத்துக்கு இடம்வைக்கவில்லை.

எனவே மலான் வெற்றி கண்டு தென்னாப்பிரிக்க இந்தியர் அதிர்ச்சியடைந்திருப்பது இயற்கை. ஆனால் ஸ்மட்ஸ் கட்சியே வெற்றிபெற்றிருந்தாலும் அதைப்பார்த்து குதூகலிக்கக் காரணமுண்டா? சிறிதுமில்லை. இந்தியரைப்பொறுத்தவரை இரண்டு கட்சிகளும் எரிகிற கொள்ளிகள்தான். அங்குள்ள இந்தியரை அங்குலம் அங்குலமாக வதைப்பதில் ஸ்மட்ஸ் கட்சிக்கு நம்பிக்கை. மலான் கட்சியோ இந்தப் பாதகத்தை ஒரேயடியாகச் செய்து முடித்துவிட வேண்டுமென்கிறது. ஸ்மடஸ் ஆட்சியில்தான் இந்தியரைத் தீண்டாதாரைப்போல் ஒதுக்கி வைக்கவும் பல வழிகளிலும் அவர்களது உரிமைகளைப்பறித்து ஒடுக்கவும் பல சட்டங்கள் உருவாயின: இந்த அக்ரமத்தை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சங்கமே ஆக்ஞையிட்டும், அச்சங்கத்தின் மூலகர்த்தாக்களில் ஒருவரென்று கூறப்படும் ஸ்மட்ஸ் அதன் முடிவை மூலையில் வீசச் சிறிதும் தயங்கவில்லை. எனவே தென்ஆப்பிரிக்க அதிகார பீடத்திலிருந்து அவர் மறைந்துவிட்டாரேயென்று யாரும் விசேஷமாகத் துக்கம் கொண்டாடத்தேவையில்லை.

மலான் அதிகாரத்துக்கு வந்ததன் மூலம் இந்தியருக்குச் சோதனை வலுக்குமென்பது உண்மைதான். இது ஒருவிதத்தில் வரவேற்கத்தக்கதே. ஏனெனில் இதுவரைபோன்று இப்பிரச்னை இழுத்துக்கொண்டேயிராமல் இதில் துரிதமாக இறுதியாக ஒரு முடிவேற்படுவதற்கு மலானின் அசுர நடவடிக்கைகள் உதவக்கூடும். தன் ஜாதியொன்றே வாழவேண்டும், மற்ற ஜாதிகளையெல்லாம் நிர்மூலமாக்கிவிட வேண்டுமென்று மதங்கொண்ட ஹிட்லர் தான் இந்த மலானின் குரு. குருவுக்கு நேர்ந்த கதியைக்கண்டும் மலானுக்கு அறிவு தெளிவு ஏற்படவில்லை. ராவணன் தோன்றியது ராட்சஸ வர்க்க

—அடுத்த பக்கம்



ஊர்ஸ்டர்ஷயர் கோஷ்டிக்கும், ஆஸ்திரேலியக் கோஷ்டிக்கும் நடந்த கிரிக்கெட் முதலாவது ஆட்டத்தைக் காண 17,000 ஜனங்கள் கூடியிருந்தனர்.

அழிவுக்காக. அதுபோல் தென்னாப்பிரிக்காவில் நிறத்திமிரால் கண்ணடைத்து வெள்ளையர் நிர்மூலமாவதற்கே மலான் இன்று அங்கு அதிகார மேடையில் தோன்றியிருக்கக்கூடும்.

அது எவ்வாறாயினும், அங்குள்ள இந்தியர் உடனடியாக மேற்கொள்ளவேண்டிய திட்டம் தெளிவானது. வெள்ளை வெறியர்களுடன் இதுவரை நடத்தியதைவிட இன்னும் பன்மடங்கு உக்கிரமான போராட்டம் நடத்தத் தயாராவதைத் தவிர அவர்களுக்கு வேறு ஒரு வழியுமில்லை. வெள்ளையர் திமிர் கண்டு அங்குள்ள சுதேசிகளிடையும் மகத்தான ஆத்திரம் மூண்டிருக்கிறது. எனவே அத்திமிரை எதிர்த்துப் போராட இந்தியர் சுதேசிகளுடன் சேர்ந்து ஒரு ஐக்கிய முன்னணி ஏற்படுத்திக்கொள்வதில் உடனேயே முனையவேண்டும். இவ்விரு ஜாதிகளும் ஒன்று சேர்ந்து தீவிரமாகப்போராட முன்வருவதன் மூலமே வெள்ளை வெறியர்களின் கொட்டத்தை ஒடுக்கக்கூடும்.

இந் நிலையில் தென்னாப்பிரிக்க இந்தியருக்கு இந்நாடு எந்த வகையில் உதவிபுரிய முடியும்? இதுபற்றி வீணான நம்பிக்கை ஏற்படச்செய்வது நாமே நம்மவரை ஏமாற்றுவதாகும். மலான் சர்க்காரை நிர்ப்பந்திக்கக்கூடிய சாதனங்கள் தற்போது நம்மிடம் கிடையாது. தென்னாப்பிரிக்காவுக்கு சணல் ஏற்றுமதியை நிறுத்துவது இப்போது முற்றிலும் இந்திய யூனியனைப் பொறுத்த விஷயமில்லை. பெருவாரியான சணல் உற்பத்தி பாகிஸ்தானில்தான். ஸ்மட்ஸ் அதிகாரத்திலிருந்தபோதே பாகிஸ்தானுடன் தனியாக ஒரு உடன்பாடு செய்துகொள்ள சூழ்ச்சி செய்தது அனைவருக்கும் தெரியும். மலான் அதைத்தொடர்ந்து ஒரு புறத்தில் தென்னாப்பிரிக்காவிலுள்ள ஹிந்து-முஸ்லிம்களிடையும், இன்னொரு புறத்தில் இந்தியா, பாகிஸ்தான் இவைகளிடையும் பிளவுண்டாக்க முயன்றால் அதில் ஆச்சரியத்துக்கு இடமில்லை.

ஆனால் இறுதியாக இவ்வுலகில் ஒரு நாட்டுக்குள்ள மதிப்பு அதன் பலம் ஒன்றையே பொறுத்தது. மற்றவர் மதிக்கக்கூடிய பலம் இந்நாட்டுக்கு உண்டானால் நம்மவர் குடியேறியுள்ள வெளிநாடு எதிலும் அவர்களுக்கு எவ்வித அவமதிப்பும் ஏற்படுவதற்கில்லை. அந்த அளவு நமது பலத்தைப் பெருக்கிக்கொள்ளும் வரை, கடல் கடந்த இந்தியர் விஷயத்தில் நாம் செய்யக்கூடியது ஒன்றே ஒன்றுதான். அதாவது அவர்கள் அவமதிக்கப்படும் பிரதேசங்களில் துரிதமாகப் பரிகாரம் கிடைக்க வழியில்லையானால், அவர்களை இந்நாட்டுக்குத் திருப்பியழைத்துக்கொண்டுவிட நாம் ஏற்பாடு செய்வதுதான். குறிப்பாக தென்னாப்பிரிக்க இந்தியர் விஷயத்தில் இந்திய சர்க்கார் அத்தகைய ஒரு ஏற்பாட்டுக்கும் தயாராயிருக்க வேண்டும்.

மகாத்மா காந்தி கொலை வழக்கு விசாரணை



மகாத்மா காந்தி கொலை வழக்கை டில்லி செங்கோட்டையில்விசாரிக்கும் ஸ்பெஷல் ஜட்ஜ் கோர்ட். இதில் எதிரிகளும் ஜட்ஜ் ஆத்மசரணரும் காணப் படுகிறார்கள்.

(கீழ்)

டாக்டர் சவர்க்காரின் சார்பாக எதிர் வழக்காட ஆஜராகும் வக்கீல்களின் விவரம் (இடதுபுறமிருந்து வலதுபுற வரிசைக் கிரமத்தில்):- ஸ்ரீமான்கள் எல். பி. போபத்கார், ஜம்னதாஸ் மேத்தர், கணபத்ராய், பி. பானர்ஜி.

கூண்டில் ஏற்றப்பட்டுள்ள குற்றவாளிகள்



இடதுபுறமிருந்து வலதுபுற வரிசைக்கிரமத்தில் காணப்படும் எதிரிகளின் பெயர் விவரம் வருமாறு:—(1) நாதுராம விநாயக காட்ஸே. (2) நாராயண தத்தாத்திரேய ஆட்தே. (3) விஷ்ணு ராம கிருஷ்ண கார்காரே. (4) மதன்லால். (5) கோபால விநாயக காட்ஸே. (நாதுராமின் சகோதரர்)



எதிரிகள் கோர்ட்டில் விசாரணை துவங்குமுன் தங்களது வக்கீல்களுடன் பேசுகின்றனர். முதல் வரிசையில் (இடதுபுறத்திலிருந்து வலதுபுற வரிசைக்கிரமத்தில்) வீற்றிருக்கும் எதிரிகள் :—நாதுராம விநாயக காட்ஸே, ஆப்தே, கார்காரே.



நானும் மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு "சென்னையில் என்ன அப்படிக் கொட்டிக் கிடக்கிறது. சதா இப்படி அலைந்து ஏன் உடம்பைக் கெடுத்துக்கொள்கிறீர்கள்" என்று கேட்டுவிட ஒரு நாள் எண்ணினேன். நான் கேட்பதற்கு முந்தி அவரே சொல்லிவிட்டார். "அமிர்தம், நமக்கு அதிர்ஷ்ட தசை திரும்பியிருக்கிறது. எல்லாம் உன்னால்தான். உன் கல்யாணியினால்தான்." என்று சொல்லிக்கொண்டே போனார். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இன்னும் என்ன சொல்லுவாரோ என்று கேட்க ஆசையுண்டாயிற்று. "நல்ல சமயத்தில் சோமு வந்து உதவினான். கொடுக்கிற தெய்வம் கூரையைப் பெயர்த்துவிட்டுக் கொட்டும். கல்யாணியை ஜெயிக்கக்கூடிய குதிரை இப்பொழுது கிடையாது, இனி வரப்போவதுமில்லை." என்று மிகவும் பரவசத்துடன் பேசினார்.

"சென்னையில் நடக்கும் குதிரைப் பந்தயத்தைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறாயா? அதில் நம் கல்யாணிதான் முதலில் ஓடிவருகிறாள். நானே தான் அவளை ஓட்டுகிறேன். ஒவ்வொரு தடவைக்கும் லட்சம் ரூபாய் தருகிறார்கள். நமக்கென்ன குறைவு? சோமு காட்டிய பலன் கைமேல் கிடைத்துவிட்டது. அவனுக்குத் தடவைக்கு பதினாயிரம் ரூபாய் கொடுக்கிறேன்.' என்று விடாமல் கூறிக்கொண்டேயிருந்தார். எனக்குமட்டும் அவருடைய இந்த செய்கை பிடிக்கவில்லை.

"தில்லை வாசி"

[சென்றவாரத் தொடர்ச்சி]

"போதும், நீங்கள் சம்பாதித்தது. இருக்கிறதை வைத்துக்கொண்டால் போதாதா? வீண் ஆசை எதற்கு? நீங்கள் சென்னைக்கும் போகவேண்டார். அந்த சோமுவும் இங்கு வரவேண்டாம்" என்று இப்பொழுது அவரை முதல் தடவையாகக் கண்டிக்க ஆரம்பித்தேன். எனக்கு சொத்துகளா பெரிது? கண் நிறைந்த கணவன்—அவர்தானே எனக்கு வேண்டும்? அவர் உடம்புக்கு ஆபத்தில்லாமல் சுகமாக இருந்தால் அது ஒன்றே கோடி கோடி ரூபாய்க்குச் சமமாகாதா?

எனக்கோ அவர் சொல்வதைக் கேட்கக் கேட்க பயம் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆனால் அவரோ மிகவும் உற்சாகமாகப் பேசினார். கல்யாணியைப் புகழ்ந்து பத்திரிகைகள் பத்தி பத்தியாக எழுதியிருந்ததை வாசித்துக் காண்பித்தார். கல்யாணியின் பாய்ச்சலில் பல தினுசுகளைப் படம் போட்டுள்ள பல பத்திரிகைகளை எனக்குக் காண்பித்தார். அநாயாசமாக பணம் வருவது என்றால் யார்தான் விரும்பமாட்டார்கள்.? என் பேதை மனத்திலும் சிறிது ஆசை ஏற்படத்தான் செய்தது. அவரும் கல்யாணியும் வீட்டிலேயே இருந்து வருகிற பணம் வந்துகொண்டே இருக்கக்கூடாதா? இப்படித்தான் நான் எண்ணினேன். "சம்பாதித்த வரைக்கும் போதும். சென்னைக்குப் போக வேண்டாம். குதிரைப் பந்தயமும் வேண்டாம். வீட்டிலேயே விழுந்து கிடங்கள்' என்று எவ்வளவோ கெஞ்சித்தான், மன்றாடித்தான் கேட்டுக்கொண்டேன். அவர் காதில் ஏறினால்தானே?

சதா வீட்டிலேயே இருந்து என்னுடன் மகிழ்ந்து குலாவிய அவர் இப்பொழுது மாதம் ஒரு தரம் அல்லது இரண்டு தரம் தங்குவதே பெரிதாயிருந்தது. சஞ்சலமே புகுந்தறியாத என் மனத்தில் எப்படியோ ஒரு மூலையில் அது உட்கார்ந்துகொண்டிருப்பதுபோன்ற உணர்ச்சியை நாளுக்கு நாள் அறிந்துகொண்டு வந்தேன். "அவருடைய குதிரைப்பந்தய மோகத்திற்கு ஒரு முடிவு ஏற்படாதா? அவர் வீட்டிலேயே இருந்துவிடமாட்டாரா? முன்போல் இரண்டு பேரும் குதூகலமாக இருக்கமாட்டோமா?" என்ற சிந்தனைகள் எழுந்துகொண்டேயிருந்தன.

அவர் குதிரைப் பந்தயத்தில் கல்யாணியை ஈடுபடுத்திய பதினெட்டு மாதங்களுக்குப்பின் அந்த எதிர்பாராத திடுக்கிடும் சம்பவம் நேர்ந்துவிட்டது. அன்றைக்கு முதல் நாள் இராத்திரிதான் சோமுவும் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தான். அதற்கு மறு நாள் அவர் வழக்கம்போல் சென்னைக்குப் போவதாகச் சொல்லியிருந்தார். அந்த இரவு மீண்டும் என் மனதில் ஏதோ ஒரு பயங்கர உணர்ச்சி உண்டாகிக்கொண்டிருந்தது. அந்த காலை நேரம் மிக

வும் பயங்கரம் நிறைந்ததாகிவிட்டது. "கல்யாணி இறந்து கிடக்கிறாள்" என்ற வார்த்தைகள் எப்படியோ அந்தக் காலை வேளையில் அரை குறைத் தூக்கத்திலிருந்த என் காதில் விழுந்தன. பதறி அடித்துக்கொண்டு எழுந்தேன். "இது உண்மையாக இருக்குமா? ஐயோ, அது பொய்யாக இருக்கக்கூடாதா?" என்ற சபலம் உண்டாயிற்று. ஆடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு ஒரே ஓட்டமாய் ஓடிக் குதிரைத் தொழுவத்தில் நின்றேன். இது வரையில் நான் சோமுவின் எதிரே நின்றதும் கிடையாது; தென்பட்டதுமில்லை. இப்பொழுது என் கூச்சம் எங்கேயோ பறந்து போய்விட்டது!

வாட்டசாட்டமாக வளர்ந்து நீண்டு உயர்ந்து தளதளவென்றிருந்த என் கல்யாணி இப்பொழுது கால்களைப் பரப்பிக்கொண்டு தரையில் கவிழ்ந்து கிடந்தாள். வாயிலிருந்து வெண்மையான நுரை வெளிவந்து தரை எல்லாம் நனைந்து கிடந்தது. பஞ்சுபோல் வெளுத்திருந்த உடல் இப்பொழுது நீல நிறமாக மாறியிருந்தது. 'ஐயோ'என்று அலறி விழுந்துவிட்டேன். "என் கல்யாணி போயே போய்விட்டாள். இனி என்னை வண்டியில் இழுத்துச் செல்லமாட்டாள்" என்று நினைக்கும்பொழுது என் தலையைச் சுவரில் மோதிக்கொள்ளலாம் போலிருந்தது.

இதுவரையில் குதிரையென்று அவளிடத்தில் வேற்றுமை யிருந்ததில்லை. நான் பேசுவேன். கல்யாணி பேசமாட்டாள். எனக்கு இரண்டு கால்கள், இரண்டு கைகள். அவளுக்கு நான்கு கால்கள் என்பது போன்ற வித்தியாசங்கள் தவிர வேறு வித்தியாசமே கிடையாது. அவள் பேசாவிட்டாலும், அவளுக்கு உணர்ச்சியில்லையா? சைகை இல்லையா தன்னுடைய அன்பை என்னிடம் செலுத்த? அவளுக்கு எத்தனையோ நாளில் நானே ஆகாரம் கொடுத்திருக்கிறேன். என்னைக்கண்டு விட்டால் அவள் கனைக்க ஆரம்பித்து விடுவாள். அன்பின் அறிகுறி போலும்! அவள் உடல் சிலிர்க்கும். அவள் ஒரு பெண் ஜென்மம். நான் ஒரு பெண் ஜென்மம். தகுந்த தோழிகள் என்றுதான் எண்ணியிருந்தேன்.

இப்பொழுதோ கல்யாணி தன் ஆட்டபாட்டத்தையெல்லாம் அடக்கி உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு விழுந்து கிடந்தாள். நான் ஒரு நிமிஷம் சித்தப்பிரமைப் பிடித்து நின்றேன். மறுகணம் கல்யாணியின் அருகில் உட்கார்ந்து விடுவேன். அவள் நெற்றியைத் தடவுவேன். வாலைக் கோதுவேன். பிடரியைப் பிடித்துப் பார்ப்பேன். அவள் உடம்பை ஸ்பரிசம் செய்து பார்ப்பேன்.

ஆனால் கல்யாணியோ இதைக் கவனிக்காது கிடந்தாள். அவளால் எவ்வாறு கவனிக்கமுடியும்? என்னை மறந்துவிட்டுத்தான் அவள் போய்விட்டாளே. "ஏதாவது ஒரு தெய்விகச் சக்தி வந்து அவள் மறுமுறை எழுந்து நிற்கமாட்டாளா?" என்ற ஆசை உண்டாகும். அம்மாதிரி கதையில்தான் நடக்கும். என் தாய், தந்தையர் இறந்தபோதுகூட நான் இம்மாதிரி அழுததில்லை. சின்னஞ் சிறுவயதுமுதல் பழகின தோழியை இப்படி இழப்பது என்றால் மனம் சம்மதப்படுமா? நான் அழுது அழுது அங்கலாய்த்துக்கொண்டேன். பெண் துக்கத்தை அடக்க முடியாது. அவரோ கல்லுப்பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருந்தார். இந்த ஆறேழு வருஷகாலமாக அவர் முகத்தில் வருத்தக் குறி தென்பட்டதை நான் அறிந்ததில்லை. ஆனால் இன்றோ அவர் முகம் உள்ளத்தின் ஆழத்தில் உண்டான துக்கத்தின் சாயலை வெளிப்படுத்திக்கொண்டிருந்தது. சோமுவும் அசந்துபோய் கவலை தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்திருந்தான். "ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ" என்று சொல்லத்தான்முடிகிறது. ஆனால் அழாமல் இருந்துவிட முடிகிறதா? அழாவிட்டாலும் வருத்தந்தான் இல்லாதுபோய் விடுமா?

(கல்யாணி பிரிந்துபோய் விட்டாள். அவளைப் புதைத்த இடத்தில் அவள் ஞாபகார்த்தமாக ஏற்படுத்தப்பட்ட சமாதி இன்னும் எங்கள் தோட்டத்தில் இருந்து அவளை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதைத் தினந்தோறும் பூச்சூட்டி வணங்கிக்கொண்டு வருகிறன். கல்யாணியை என் தெய்வத்தின் மேலான தெய்வமாக நான் எண்ணிக்கொள்கிறேன்.)

கல்யாணி மறைந்துபோய் இரண்டு மூன்று தினங்களில் சோமுவும் போய்விட்டான். அடிக்கடி வந்து அவரைப்பார்த்துவிட்டுப் போவதாகச்சொல்லி அவருக்குத் தைரியம் கூறி கவலைப் பட வேண்டாம் என்று ஆறுதல் சொல்லி விட்டுத்தான் போனுன். போனவன் போனவன்தான்! திருப்பி வரவேயில்லை.

திடீரென்று கல்யாணி தொழுவத்தில் இறந்து கிடந்ததில் ஏதோ சூழ்ச்சி இருக்க வேண்டுமென்று என் புத்தியில் பட்டது. அன்றிரவு குதிரைக்கு யார் தீனி வைத்தது என்று வேலைக்காரனை விசாரித்தேன்.

அவன் "சோமுதான் கொள்ளு முதலியவைகளை வைத்தார். நாங்கள் யாரும் கிட்ட இருக்கவில்லை" என்று சொன்னுன். அந்தப்பாவி சோமு குதிரையின் ஆகாரத்துடன் விஷத்தைக் கலந்து கொடுத்திருக்கிறுன். அவன் செய்த சதியால் விதி என்னைச் சோதித்துவிட்டது. உயிருக்குயிரான கல்யாணியின் உயிரும் போய்விட்டது. இதனுல் அவன் என்ன பலனை அடைவானே? யார் கண்டது?

"குதிரைப் பந்தய மோகம் அவரைவிட்டு நீங்கி அவர் வீட்டிலேயே இருந்துவிடமாட்டாரா!" என்று ஒவ்வொரு கணமும் நினைத்து வந்தேன். கல்யாணி மறைந்த துக்க சம்பவத்திற்குப் பிறகு அது சாத்தியமாயிற்று. கல்யாணியுமிருந்து அவரும் வீட்டோடேயே இருந்திருந்தால் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்திருப்பேன். தெய்வ சங்கற்பம் இப்படி ஏற்பட்டுவிட்டது.

"போனது போகட்டும். நமக்குக் கல்யாணி கொடுத்துவைத்தது அவ்வளவுதான். மனதைத் திடப்படுத்திக்கொள்ளுங்கள். வீட்டுக்காரியங்களைப் பார்த்துக்கொண்டு நீங்கள் உடம்புக்கு ஒன்றும் வராமல் இருந்தால் அதுவே போதுமானது" என்று அவரைத் தைரியப்படுத்தி வைத்தேன். அவர் முன்போல் இப்பொழுது எங்கும் போவதில்லை. அவர் என்னென்ன மனக்கோட்டைகள் கட்டியிருந்தாரோ? அவைகள் இப்பொழுது தகர்ந்து போயிருக்கவேண்டும். அவர் முகத்தில் துக்கத்தின் சாயல் இல்லாமலில்லை. எப்படியோ ஒருவாறு பொழுது போய்க்கொண்டிருந்தது.

கல்யாணி மறைந்து ஆறுமாதத்திற்குமேல் ஆகிவிட்டது. அந்தச் சோமு இந்தப்பக்கம் வரவேயில்லை அந்தமட்டும் நல்லது என்று எண்ணியிருந்தேன். அவன் இப்பொழுது யார் குடியைக் கெடுக்கப் போயிருக்கானே? அந்த 'வன மித்திரன்' வாரப்பத்திரிகையை அவர் பார்க்காமலிருந்திருக்கக்கூடாதா? அதில் வெளிவந்திருந்த படம் அவருக்கு மன அதிர்ச்சியை உண்டுபண்ணியிருக்க வேண்டும். அதைப்பார்த்து அவர் தேம்பித் தேம்பி அழுதுவிட்டார். "கல்யாணி பந்தயத்தில் ஓடிக்கொண்டிருந்தபோது இரண்டாவதாக வந்த அந்த நீலவேணிக்குதிரை இப்பொழுது முதலில் ஓடி

வருகிறது. அதை ஓட்டிச் செல்பவன் சோமு" என்று அதில் போட்டிருந்தது.

"கல்யாணியை மீறக்கூடியக் குதிரை இல்லவே இல்லை என்று எண்ணியிருந்தேன். என் ஆசையில் மண் விழுந்துவிட்டது. நீலவேணி இப்பொழுது சோமுவின் சொந்தக் குதிரையாம்" என்று கூறும்போது அவர் உள்ளத்கின் சோகம் நன்கு விளங்கிற்று. "மதுரையில் யாரோ ஒருவனுக்குச் சொந்தமானது இந்த நீலவேணிக் குதிரை. இது எப்படியோ முண்டியடித்துக்கொண்டு முதலில் வரப் பார்க்கும். ஆனால் நமது கல்யாணி ஏமாந்தால்தானே அதனால் முதலில் வந்திருக்கமுடியும்? கல்யாணி போன பின் அது முதன்மை ஸ்தானத்திற்கு வந்திருக்கிறது. அதை எப்படியோ சோமு தான் வாங்கிக் கொண்டிருக்கிறான். அது மட்டிலும் அவனாவது வாழ்கிறானே?" என்று பேசினார்.

கல்யாணி எப்படி இறந்தாள் என்பதைப்பற்றி அறிய அவர் மனம் இதுவரையிலும் ஈடுபடவில்லை என்று இந்தப் பேச்சிலிருந்து அறிந்தேன். அளவுக்கு மீறிய துக்கத்தில் அதைப்பற்றிச் சிந்திக்கவில்லை போலும். ஏதோ அரவம் தீண்டி இறந்திருக்கும் என்று எண்ணினாரோ, என்னமோ? அந்தமட்டும் நல்லதுதான் என்றிருந்தேன். "வன மித்திரன்" பத்திரிகையில் கண்டிருந்த செய்தியிலிருந்தும், அவர் பேசின பேச்சிலிருந்தும் நான் சோமுவின் மீது கொண்டிருந்த சந்தேகம் ஊர்ஜிதமாய்விட்டது. "நன்றி கெட்ட சுயநலக்காரன். நம்பிக்கைத்துரோகி. அவன் வாழ்கிற வரைக்கும் வாழட்டும்" என்றுமனதில் அவனைக் கரித்துக்கொட்டினேன். சோமுவைச் சந்தேகித்ததுபற்றி எள்ளளவும் அவருக்குச் சொல்லவில்லை. சொன்னால் "எரிகிற நெருப்பில் நெய்யை வார்த்ததுபோல் அவருடைய வருத்தம் இன்னும் அதிகமாய்ப் போய்விடுமோ" என்று மிகவும் எச்சரிக்கையாகவே இருந்தேன். அவருடைய மனதை எந்தவிதத்தில் திருப்பலாமோ அந்தந்த விதத்தில் திருப்ப முயற்சி செய்து வந்தேன். "வன மித்திரன்" பத்திரிகையில் கண்டவுடன் அவர் சோமுவுக்கு அவனைப் பாராட்டி அவன் வெற்றியைத் தன் வெற்றியாகக் கருதுவதாகவும், தன்னை வந்து சந்திக்கும்படி ஒரு கடிதம் எழுதியிருப்பதாகவும் சொன்னார். அவன் பதில் போடவுமில்லை. வந்து அவரைப் பார்க்கவுமில்லை. துரோகி, எப்படி வருவான்? குற்றமுள்ள நெஞ்சாயிற்றே! உறுத்துக்கொண்டேயிருக்காதா? அவன் பதில் போடாததும், எங்கள் வீடு தேடி வராததும் நல்லதுதான் என்று நினைத்தேன்.

இந்த ஆறு, ஏழு மாதங்களில் அவருடைய தேகத்தில் உண்டான மாறுதல்களை நான் அறிய முடியவில்லை. முகத்தில் மகிழ்ச்சியின் அறிகுறி இல்லை. சோகத்தின் ரேகையைத்தான் நான் கண்டுகொண்டது. ஏதோ வேளா வேளைக்கு சாப்பிடுவதும், உறங்குவதுமாயிருந்து வந்தார். ஆனால் அந்த 'வனமித்திரன்' பத்திரிகையைப் படித்தது முதல் அவரிடம் ஏற்பட்ட மாறுதல்களை நான் நன்கு அறிந்துகொண்டுவிட்டேன். முப்பதாவது பிராயத்திலிருந்த அவர் பத்து வயது அதிகமுடையவராகவே காணப்பட்டார். முன்பு ஏதோ கொஞ்சம் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர், இப்பொழுது ஒருவேளை சாப்பிடுவார், ஒருவேளை சும்மா இருந்துவிடுவார். நானும் எத்தனையோ பலகாரம் பக்ஷணங்களும் அவருக்குப் பிடித்தவைஎன்பதைத் தேர்ந்தெடுத்து செய்து பரிமாறித்தான் பார்த்தேன். அவர்சாப்பிட்டால்தானே? நாளுக்குநாள் அவர் மெலிந்து வருவதை அறிந்து சொல்லொணாக் கவலையடைந்தேன். நானும் அவரைஎந்தமுறையில் கவனித்து வரலாமோ, அந்த முறையைக் கையாண்டு பார்த்தேன். பயன்?

வெற்றியைச் சம்பாதித்துக் கொடுத்த கல்யாணி திடீரென்று எதிர்பாராத விதமாக இறந்து போனது அவர் ஆசையில் தீ வைத்ததுபோல் இருந்திருக்க வேண்டும். அவர் இதை ஒரு அவமானமாகக் கருதியிருக்க வேண்டும். நீலவேணியின் வெற்றியையும், சோமுவின் அதிர்ஷ்டத்தையும் அறிந்ததினால் இன்னும் அவரது கவலையில் கல்யாணி இல்லாததினால் அதிகரித்திருக்க வேண்டும். மூளையிலும் அதிர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும். அவருக்கு உலகம் கசந்து போயிருக்க வேண்டும். உயிரைப் பிடித்துக்கொண்டு வாழ்ந்து வந்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

நாளுக்குநாள் சாப்பிடுவது குறைந்துகொண்டே வந்தது. கடைசியில் தண்ணீர் கலந்த ஆகாரம் சாப்பிடுகிற நிலைமைக்கு வந்துவிட்டார். ஏதோ நடமாடிக் கொண்டிருந்தார். அதுவும் வீட்டிற்குள்ளாகவேதான். இந்த ஒரு வருஷகாலமாகவே அவர் தனியறையிலேயே படுத்துவந்தார். அவர் முன்போலவே உடம்பு தேற வேண்டுமே, உற்சாக புருஷனாக இருக்கவேண்டுமே என்று நான் பலவிதத்திலும் முயன்று வந்தேன். பிரபல டாக்டர்களை அழைத்து வந்து அவர் உடம்பைப் பார்க்கச் சொன்னேன். பார்த்தவர்கள் எல்லோரும் உடம்பு ஒன்றுமில்லை, மூளைக் கொதிப்பு அதிகம் ஏற்பட்டிருக்கிறது. எங்காவது மலைவாசம் செய்தால் உடம்பு குணமடையும்" என்று சொன்னார்கள். நானும் அவரை உதகமண்டலத்திற்கு வரும்படி வலுக் கட்டாயப் படுத்தினேன். அவர் வீட்டை விட்டு எங்கும் வரமுடியாது என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டார். நான் என்ன செய்வேன்? பேதைப் பெண், எப்படியோ கடவுள் இஷ்டப்படி நடக்கட்டும் என்று அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருந்து வந்தேன்.

அந்தக் காலை நேரத்திலும் என் தலையில் ஒரு இடியா—இல்லை—பேரிடியா வந்து விழ வேண்டும்? மாடியில் படுத்திருந்து எழுந்து, வெளி வருபவர் காலை எட்டு மணியாகியும் இன்னும் எழுந்திருக்கவில்லை என்று வேலைக்காரி சொன்னாள்.

நானே மாடி அறைக்குச்சென்று பார்த்தேன். படுத்தவர் படுத்தபடியே கிடந்தார். தட்டி எழுப்பினேன். உடம்பு சில்லிட்டிருந்தது. உயிர் இருந்தால்தானே எழுந்திருப்பார். எனக்கு அப்பொழுது இருந்த துக்கத்தில் அப்படியே அந்த உயர்ந்த மாடியிலிருந்து கீழே இருக்கும் பெரிய பாறாங் கல்லில் தலைக்குப்புற விழுந்து உயிரைப் போக்கிக் கொள்ள முயன்றேன். வேலைக்காரிமட்டும் படுக்கையின் அருகில் கிடந்த அந்தக் கடிதத்தை என்னிடம் கொடுத்திருக்காவிட்டால் நானும் அவரைப் பின்தொடர்ந்து சென்றிருப்பேன். அந்த மரண சாசனம் எல்லையற்ற என்னுடைய

கவலையிலும் இன்னும் உயிர் வாழ்ந்திருக்கச் செய்துவிட்டது.

"என் கண்ணின் கருமணியாகிய அமிர்தவல்லிக்கு ஏமாற்றத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்த உன் கணவன் எழுதிக்கொண்டது:-

உன் கணவன் என்று சொல்லிக் கொள்வதற்கு வெட்கமாயிருக்கிறது. நீ என் தவப்பயனாய்க் கிடைத்த மனைவி. உன்னைப்போல் அவ்வளவு அருமை பெருமையாய் யார் இருக்கமுடியும்! உன் புத்தி மதிகளை நான் கேட்கவில்லை. கல்யாணி நமக்குக் கிடைத்தற்கரிய மாணிக்கம். அவளை இழந்துவிட்டோம். கொஞ்ச நாள்வரைதான் தக்க வழியில் அனுபவித்து வந்தோம். கடைசி வரையில் கல்யாணியை நமது முதல் வழியிலேயே செலுத்தி இருந்தால் அவளை நாம் இழந்திருக்க வேண்டியதில்லை. நானும் இந்தக் கடிதம் எழுதும்படியான நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருக்காது. கல்யாணி ஏதோ பாம்பு தீண்டி இறந்திருக்கும் என்றுதான் நீ எண்ணியிருப்பாய். நண்பனுக்கு நண்பனாய் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருந்த அந்த சோமுதான் அவளுக்கு விஷமிட்டுக் கொன்றிருக்கிறான். அவன் சுய நலம்—அந்த நீலவேணிக் குதிரையின் வெற்றியை தான் அடைந்து லாபம் சம்பாதிப்பதற்காக இந்தச் சதி செய்துவிட்டான். அன்றே அந்தத் துரோகியை மென்னியைத் திருகிக் கல்யாணியின் காலடியிலேயே என்னால் போட்டிருக்க முடியும். நானும் அங்கேயே ஒரு கல்லில் தலையை மோதிக் கொண்டிருப்பேன். ஒரு கொலைக்காக மூன்று கொலைகள் அவ்விடத்திலே நிகழ்ந்திருக்கும். பாவம், உன்கதி, நிர்க்கதியாகக்கூடாது என்பதற்காகவும், நமது மூன்று வயது பாலகனுக்காகவுமே அத்தத்தீச் செயலில் இறங்காது அந்தசோமுவை வாழவிட்டேன். அவன் மனசாட்சி அவனை விசாரித்துக் கொள்ளும் என்றுதான் நானும் இவ்வளவுநாள் இருந்து வந்தேன். கல்யாணியை மறக்க முயன்றேன், மறக்க முடியவில்லை. சோமுவின் நட்பையும் குதிரைப் பந்தயத்தையும் மறக்க எத்தனித்தேன். முடியவில்லை.

உலகத்தில் வாழத்தான் விரும்பினேன். ஆனால் என்னால் உயிர் வாழ முடியவில்லை. நாளுக்குநாள் பலஹீனமும், உலக வாழ்க்கையில் வெறுப்பும் எற்பட்டு இனி வாழமுடியாது என்கிற நினைப்புத்தான் அடிக்கடி மனதில் தோன்றி அல்லல்படுத்திக்கொண்டிருந்தது. இயற்கையாகவே சாவு வருகிற வரையில் நான் இருக்க விரும்பினால்கூட என்னால் இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள் தான் அப்படி இருந்திருக்க முடியும். உத்தமியாகிய உன்னை ஏன் இன்னும் கொஞ்சநாளைக்கு உயிரைப் பிடித்துவைத்துக் கொண்டு ஹிம்சை செய்யவேண்டுமென்று என் முடிவை நானே தேடிக் கொள்கிறேன். நீ மனத் தைரியத்தை விடாதே. என்னைப்போல் உயிரை மாய்த்துக் கொள்ள நினைக்காதே. நமது பச்சிளம் பாலகனுக்காகவே நீ உயிர் வாழ வேண்டும். குழந்தைகளுக்குத் தாய்தான் பெரிய ஆதரவு. அவனை வளர்த்துச் சிறந்த மனிதனுக்கும் பொறுப்பை உன்னிடம் விட்டுச் செல்றேன். உன்னை இப்படித்தவிக்க விட்டு விட்டேனே என்று என்னை நிந்திக்காதே, நீ அவ்வாறு செய்யமாட்டாய். நீ தான் என் தெய்வம். விடைபெற்றுக்கொள்கிறேன்"

இதுதான் அந்த மரண சாஸனம். இதுதான்என் வாழ்க்கைக்கு வழிகாட்டி.

அவர் என்னை விட்டுப் பிரிந்து போய் கிட்டத்தட்ட முப்பது வருஷங்களாகின்றன. அவர் சொல்லிப்போனக் கட்டளையை நிறைவேற்றுவதற்காகவே இன்னும் உயிர் வாழ்ந்து வருகிறேன். வயதோ அறுபதையும் தாண்டிவிட்டது. என் மனக்கோயிலில் அவர் தான் தெய்வமாக விளங்கி வருகிறார். அவரை உள்ளத்தில் வைத்து ஒவ்வொரு நிமிஷமும் நான் பூஜைசெய்வதை யாரும் அறிந்திருக்க முடியாது. ஆனால் என் தோட்டத்து தெய்வம் கல்யாணிக்கு நான் பூச்சூட்டி, பூஜைசெய்து வணங்குவது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். எண்ணிறந்த செல்வத்தை நிர்வகித்துக் கொண்டு, அவருடைய வார்சான என் மகனை வளர்த்து மனிதனுக்கிவிட்டேன். என் சிந்தனை வீட்டில் அவரும், கல்யாணியும் எந்த நிமிஷத்திலும் நடமாடிக்கொண்டிருக்கிறார்கள். கல்யாணியின் சமாதியை அன்று முதல் இன்று வரைத் தவறுமல் வணங்கிக் கொண்டு வருகிறேன். கல்யாணியை எப்படி என்னால் மறக்கமுடியும்!

—

"......என்ன தரகர்வாள். வரதட்சணை நிறைய கொடுத்து, நகை, பாத்திரங்களெல்லாம் ஏராளமா செய்யறேன்னு சொல்லிகூட, குருசாமி அய்யர் பெண்ணை பண்ணிக்கமாட்டேன்னு அந்தப் பையன் கிருஷ்ணமூர்த்தி பிடிவாதமா இருந்தானே, கடைசிலே எப்படி கல்யாணத்தை "ஸெட்டில்"பண்ணினேள்"

தரகர்:—அதுவா! ரொம்ப 'சுருக்கமா' முடிஞ்சுபோச்சுன்னு! பையன் பட்டணத்தில் குடித்தனம்பண்ண, ஒரு வீடு வாடகைக்குத் தேடித்தருவதாக குருசாமி அய்யரை 'ப்ராமிஸ்' பண்ண சொன்னேன்......அவ்வளவுதான்......!"

நாமொன்று நினைக்க—

ப. மஹாலிங்க சாஸ்திரிகள் எம். ஏ. பி. எல்

மணி தன் சம்சாரம் நாகுவிடம், தான் பட்டணம் போக வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டினார்.

நாகு, "அவர்கள் பெரிய இடமாய் எதிர்பார்க்கிறார்கள் போலிருக்கிறது. முன் மனுஷ்யாளாக இல்லை. புது மகிமை வாய்த்திருக்கிறது. உங்களுக்கு இங்கே வாங்கிக்கொண்ட பேச்சு போதாது. இன்னும் காசைச் செலவு செய்துகொண்டு பட்டணம்போய் மருமானிடமும் அவமானம் பட்டுக்கொண்டு வரவேணுமாக்கும்" என்று இடித்துக் காட்டினாள்.

"என்னமோ நம்ம குழந்தைக்கு ஒரு இடத்தில் ஒரு அகமுடையானை அந்தப்பிரும்மா சிருஷ்டிக்க மறந்தா போயிருப்பான்? வீணாக கர்வம் பிடித்தவர்கள் காலைக் கட்டும் விவகாரம் எனக்குப் பிடிக்கவில்லை" என்று கனிந்து பேசினாள்.

"இந்த வேளையிலே போனவாளுக்கு ஒரு டம்ளர் காப்பிகூடக் கொடுக்கவில்லையா? என்ன தங்கை?—கிராதகி! இவளிடம் சம்பந்தம் பண்ணினால் நம் குழந்தைக்கு என்ன சுகம் கிடைக்கப் போகிறது?" என்று தூஷித்துப் பார்த்தாள்.

பிடிவாதமுள்ள மணி தன் பிரயாணத்தை நிறுத்தவில்லை. "சகுனி மாதிரிப் புறப்படும் வேளையிலே அஸ்துச் சொல்லாதே" என்று அவளை அடக்கிவிட்டு ஐந்து மணிக்குள் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார்—ஒரு படுக்கை, டார்ச்சு லைட்டுடன்.

ஆனால் ஸ்டேஷனில் ரயில் வரும் பரபரப்பு ஒன்றையும் காணோம். டிக்கட் ஜன்னல் திறக்கப்படவில்லை. விசாரித்ததில் ரயில் அன்று $1\frac{1}{2}$ மணி 'லேட்'டாக வருமென்று தெரிந்தது. 'கிருஷ்ணா' வென்று ஒரு பெஞ்சி ஓரத்தில் உட்கார்ந்தார் மணி. படுக்கையை பெஞ்சியின் கீழ் வைத்துக்கொண்டார். டார்ச்சை படுக்கை கட்டிய கயிற்றின் இடையில் சொருகியிருந்தார். மணியின் சிந்தனை பல பாதைகளில் ஓடிக்கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் அந்தப் பெஞ்சிக்கு மூன்று ஆசாமிகள் வந்து அதில் உட்கார்ந்தார்கள். அவர்களைபார்த்தால்பிரயாணிகளாய்த் தோன்றவில்லை. மூட்டை முடிச்சு ஒன்றையும் காணோம். மூவரும் ஒரு கோஷ்டி என்பது அவர்களின் சிரிப்பு, களிப்பு, விளையாட்டுகளினால் தெரிந்தது. உடுப்பும் அவர்கள் அநேகமாய் ஒரே மாதிரியாய்த்தான் உடுத்திருந்தார்கள். உள்ளே அணிந்திருக்கும் வலை பனியன் தெரியும்படியான காகிதம் போன்ற மெல்லிய வெள்ளை அரைக்கை ஷர்ட்டு, அறையில் கீழேபுரளும்படி தழைத்து தரித்த தூய நான்கு முழம் மில்வேஷ்டி, கிராப்புத் தலை, கறுத்த மேனி, காலில் புதுச் செருப்பு. ஒருவன் மட்டும் கழுத்தில் லேசான தங்கச் செயினும், கையில் ரிஸ்டு வாட்சும் அணிந்திருந்தான். அவன் தோள் மேல் விசிறி மடிப்பு, சேலம் அங்கவஸ்திரம் தவழ்ந்தது. மற்ற இருவரும் துண்டுதான் போட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ரயில்வே ஸ்டேஷனில் எந்தவிதமான விசேஷ காரியமுடையவர்களாகவும் தோன்றவில்லை. தமாஷாகப் பொழுது போக்கிற்கே அங்கு வந்திருந்ததாய் தோன்றிற்று. அவர்களின் ஹாஸ்யம் நிமிஷத்திற்கு ஒரு தரம் ஸ்டேஷன் கூடத்தையே அதிரச்செய்துகொண்டு ஒலித்தது. மத்தியிலிருந்த விசிரிமடிப்புத் தங்கச் செயின், ரிஸ்டுவாட்சைப் பக்கத்திலிருந்த இரு தோள்த் துண்டுத் தோழர்களும் உத்சாகப்படுத்தி உடுக்கடித்துக்கொண்டிருந்தது நன்று விளங்கிற்று. நடுநாயகம் கம்பிரமாய் உட்கார்ந்திருந்தான். கால்களை முன்னே எட்டினவரை நீட்டி, முதுகை விறைக்கவைத்து, முகத்தை மேல் நோக்கச்செய்து, கைகளை இரு பக்கங்களிலும் முழம்போடுகிறவனைப்போல் விரித்துவிட்டு, அவன் வீற்றிருந்த கோலத்தைப்பார்த்தால் ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட காட்சி ஞாபகத்திற்கு வரும். அவன் வாயில் புகைச்சுருட்டு பற்றவைக்கப்பட்டிருந்தது. நண்பர்கள் அவன் செவிகளில் பொழியும் ஹாஸ்ய மொழிகளுக்கு அவன் குலங்கக் குலங்கச்சிரிக்கும்போது சிலுவையிலிருந்து விடுபட உதைத்துக் கொள்ளுபவன்போல் காணப்பட்டான். வாய்விட்டுச் சிரிக்கப் புகைச்சுருட்டு தடை செய்தபடியால், அவன் சிரிப்பது மூச்சுக்கு ஒரு முறை கனத்தபடலமாய்க்கக்கப்படும் புகைத்திரள்களால் ஊகிக்கத்தகுந்ததாயிருந்தது. தாங்கமுடியாத சிரிப்பு வந்த போதுமட்டும் அம்மனிதன் புகைச்சுருட்டை வலது கையின் இருவிரல்களால் அநாயாசமாக அப்புறப்படுத்திக்கொண்டு கோழி விக்கலுக்கு ஒப்பான ஒருவித விசித்திர சப்தத்துடன் சிரித்தான். அப்போது அவன் காண்பித்த ஹஸ்த வின்யாசம் துவைத தத்துவத்தை விளக்கும் ஸ்ரீமத்வா

சாரியரின் உபதேச ஹஸ்தத்தை ஞாபகப்படுத்துவதுடன், தணிந்து புகையும் சுருட்டுமூலம் தூமமார்க்கம் என்று வேதாந்தங்களில் சொல்லப்படும் மார்க்கத்தையே தான் கடைப்பிடித்திருப்பதையும் புலனாக்குவதாயிருந்தது. அதே சமயத்தில் அம்மனிதனுடைய முகத்துவாரம் நாஸித்துவாரங்களின் வழியே எழுந்து சுழலும் தூமச்சுருள்கள் தபோகுண மயமான அவன் ஆத்மாவின் அத்தாட்சிகளாய்த் தோன்றின.

ஒவ்வொருதரம் சிரிப்புக்கும் முற்றுப் புள்ளி வைப்பதுபோல் இருவிரல்களிடையில் தங்கிய அந்த தூமவர்த்தியின் எச்சில் ஊறிய நுனியைப் பற்களின் கடிப்பை நாடச் செய்த அவனது வலது கை, மோட்டார்களின் முன்னே கண்ணாடிப் பலகையில் பனிமழைச் சாரல்களின் மூட்டத்தை விலக்க அரைவட்ட ஓட்டத்தில் வேலை செய்யும் விசைக் குச்சியை ஞாபகப்படுத்தியது.

இவ்வளவு சுவாரசியமாக அவர்கள் என்ன விஷயத்தைப் பேசிக்கொண்டிருந்தார்கள் என்று மணியால் அறிய முடியவில்லை, அவர் அறிய விரும்பவுமில்லை. அவர்களின் கதைக்கு “மாப்பிள்ளை முறுக்கு” “மாமன் முறிவு” என்பதுபோல் ஒன்று தலையங்கமாக விருக்கலாமென்று மணி நினைத்தார். மணிக்கு பெஞ்சியில் உட்கார்ந்திருப்பது சங்கடமாயிருந்தது. இட நெருக்கடியுடனும், அட்டகாச சப்தங்களுடனும், புகைப்படலம் அவரைக் கும்பகப்ராணாயாமம் செய்யும் நிர்ப்பந்தத்தில் ஆழ்த்திவிட்டபடியால் அவர் எழுந்திருக்கப் பார்த்தார். ஆனாலும் சரேலென்று எழுந்துவிட அவருக்கு மனம் வரவில்லை. முதலாவது, வேறு ஒரு பெஞ்சியும் காலியில்லை. இரண்டாவது, தான் முன்னதாகவே பற்றிக்கொண்ட இடத்தை ஏன் விடவேண்டும்? அப்படிவிட்டால் படுக்கையையும் அல்லவா தூக்கிக்கொண்டு செல்லவேண்டும்? மூன்றாவது, இதுவரை தான் ஒருவன் பக்கத்தில் இருப்பதாகவே அம்மூவரும் கவனிக்காதிருக்க, இடத்தைக் காலி செய்வதின் மூலம் அவர்கள் தன்னைக் கவனிக்கும்படி ஏன் செய்துகொள்ள வேண்டும்? நான்காவது காரணத்தை மணி சிந்திக்கும் முன் உண்மையில் அங்கு உட்கார்ந்திருக்கத் தனக்குச் சம்மதமா, சௌகரியமா என்று மற்றொரு விதமாய் ஆலோசிக்கத் தொடங்கினார்.

“அசௌகரியத்தை அனுபவித்துக்கொண்டாவது இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் என்ன? இடத்தைப் பிடித்துக்கொண்டு கஷ்டப்படுவது சுதந்திரமா? விட்டு ஒழித்துவிட்டு யதேச்சையாய் போவது சுதந்திரமா? எழுந்திருந்துவிட்டால் அவர்களுக்கும் இடவசதி அதிகமாகும். நமக்கும் நெருக்கடியிலிருந்து விடுதலை ஏற்படும்—” மணிக்கு உட்கார்ந்திருப்பது கோழைத்தனம் என்றும், எழுந்து செல்வது தீரத்தனம் என்றும் விளங்க ஆரம்பித்தது. படுக்கையைக் கிளப்பக் குனிந்தார். அப்போது, “நீங்கள் ஊருக்குப் போகிறீர்களா” என்று கேட்கும் உரத்த குரல் ஒன்று காதில் விழுந்தது. மணி நிமிர்ந்து திரும்பி பார்த்தார், வேறு ஒருவருமில்லை. சாமாபிள்ளை அய்யாப்பயல்தான். “ஏண்டா! அய்யாப்பயலே! எங்கே வந்தாய்?” என்று கேட்டுக்கொண்டு மணி பெஞ்சியை விட்டு எழுந்திருந்து அய்யாப்பயலிடம் போனார். அவர் போகாதபோனால் அய்யாப்பயல் அவரிடம் வந்திருப்பான். அங்கு உட்கார்ந்துகொண்டு பேச்சு வார்த்தைகள் நடத்த மணி இஷ்டப்படவில்லை. அவர் அய்யாப்பயலைக் கூப்பிட்டுக்கொண்டு எழுந்திருந்ததும் அவருக்குப் பின்னால் இடி விழுந்தால் போல் மூன்று பேர்களுடைய சிரிப்பும் கேட்டது. மணி திரும்பி பார்க்கவே வெறுப்படைந்தார். திரும்பி பார்த்தால் சமய சந்தர்ப்

“...சகுனிமாதிரி புறப்படும் வேளையிலே அஸ்துச் சொல்லாதே...”

பத்திற்கு விரோதமாய் ஏதாவது விவகாரங்களில் தலையிட்டுக் கொள்ள நேரலாமென்று அவர் நினைத்து அந்நிலையில் ஒன்றையும் பொருட்படுத்தாமல், முகமலர்ச்சியை வரவழைத்துக்கொண்டு சாமாபிள்ளை அய்யாப்பயல் ஸ்டேஷனுக்கு வந்த காரணத்தை விசாரிக்கலானார்.

"எங்கேயடா வந்தாய்"?

"அதுதான் ஒரு இது போட..."

"எது?"

"அதுதான் ஒரு தபால்......"

"தபாலா?"

"அதுதான் மாமா, தபாலாபீஸுக்கு லேட்டாப் போச்சாம்"

"அதுக்காக?"

"ரயில்லே போடச் சொன்னார்"

"யார்?"

"அவர்தான்—கீழண்டத் தெருவிலே......"

"...அவர்களின் ஹாஸ்யம் நிமிஷத்திற்கு ஒரு தரம் ஸ்டேஷன் கூடத்தையே அதிரச்செய்து கொண்டு ஒலித்தது......"

"கீழண்டத் தெருவிலே?"

"குள்ளமாய் சிகப்பாய்"

"என்னடா சொல்றே?"

"ஒன்றுமில்லே மாமா அதுதான் அந்த வாத்யார் இருக்காரோ இல்லையோ. அவர் ஒரு லெட்டர் கொடுத்தார். போஸ்டாபீஸுக்கு நாழியாச்சாம். ரயில்லே போய், வந்து, இது பண்ணச் சொன்னார்"

"எந்த வாத்யார் நாலாவது ஸாரா?"

"இல்லை மாமா, உங்களுக்குப் புரியல்லியே. அத்யயனம் சொல்லி வைக்கிற வாத்தியார்"

"சீனு வாத்தியாரா?"

"சீனு வாத்தியார் உயரமான்னா இருப்பார்! நான்தான் அப்பவே குட்டைன்னு சொன்னேனே"

"ஏண்டா அய்யாப்பயலே! அவருக்குப் பேர், ஊர் கிடையாதா"

"இந்த ஊர்தான்"

"பேர்"

"எல்லாம் உங்கள் உறவுதான்"

"என்னடா எலே நான் நாலு நாழியாய்க் கேட்கிறேன்"

"நான்தான் சொல்லுகிறேனே. உங்கள் வேம்பு அம்மாமி இருக்காளோ இல்லையோ?"

"ஆமாம்"

"அந்த மாமாதான்"

"சேஷு சாஸ்திரிகளா?"

"இப்போதான் உங்களுக்குப் புரிந்தது!" மணிக்கு அக்கரை அதிகரித்தது. மனம் குழம்பிற்று.

சிந்தனை லகானில்லாமல் ஓடத் தலைப்பட்டது.

"அப்படி என்ன அவசரம், யாருக்கு? எந்த ஊருக்கு?"

"எனக்கு என்ன மாமா தெரியும்? கடிதம் இதோ இருக்கிறது. இரண்டணா காசு கொடுத்திருக்கிறார். ரயிலில் அதிகப்படி ஸ்டாம்பு ஒட்டிப் போடச்சொன்னார். அது தான் வந்தேன். உங்களைப் பார்த்தேன். ரயில் எப்போது வரும்? இருட்டிப் போய்விடும் போலிருக்கிறதே"

"ரயில் இன்னிக்கு லேட்டு"

"ஐயய்யோ! நான் அப்பாவிடம் கூடச் சொல்லிக்கொள்ளவில்லையே! கன்னுக்குட்டியைக் குளிப்பாட்டி ஓட்டிக்கொண்டு வந்தேன். அந்த வாத்யார் "ஏ அய்யாப்பயலே ஏ அய்யாப் பயலே! என்று கூப்பாடுபோட்டார் (அந்த வாத்தியார் போட்ட சப்தத்தை நினைத்து அய்யாப்பயல் சிரிப்பை அடக்கமுடியாமல் சிரித்தான்) நான் பயந்து போய்விட்டேன். அவாத்துக் கொல்லையிலே மாடு மேய்த்ததற்காக வையப்போகிறார் என்று நினைத்தேன். ஆனால் அவர் கூப்பிட்ட காரியம் வேறு"

"இந்த லெட்டரைக் கொடுத்தாராக்கம்?"

"கொடுத்துட்டு என்ன சொல்கிறார்—'ஜாக்கிரதை கீழே போட்டு விடாதே—இந்தாகாசு, பத்திரம். கெட்டுப் போக்கிவிட்டு அங்கே போய் முழிக்காதே'—(அய்யாப்பயலுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை) நானா காசைக்கீழே போடுவேன்?— 'ரயிலுக்கு நாழியாகி விட்டது உடனே போ! எங்கேயாவது பிலாக்குப் பார்த்துக்கொண்டு நிற்காதே— போய் விட்டு வந்து என்னிடம் போட்டு விட்டேன் என்று சொல்லி விட்டுப்போ. பேசாமல்போய்விடாதே —என்ன நான் சொல்லுகிறது தெருஞ்சுண்டாயா! (அய்யாப் பயலுக்கு சிரிக்காமலிருக்க முடியவில்லை) என்ன எச்சரிக்கை! என்ன ஜாக்கிரதை! — அதுலேயே ரயிலுக்கு நாழியாகும் என்று நினைத்தேன். இங்கே வந்தால் இன்னும் லேட்டாக வரப்போகிறது, ரயில் என்கிறீர்கள்!"

"ஆமாம்டா! ராத்திரி 7-8மணி கூட ஆகும் என்று சொல்கிறார்கள்"

"ஐயையோ! நான் அத்தனை நாழி காத்திருக்க முடியாதே; நீங்கள் எங்கே மாமாபோகிறீர்கள்?"

"நான் பட்டணம் போகிறேன்"

"மாமா உங்களை நமஸ்காரம் பண்ணி கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் எனக்கு ஒரு உபகாரம் பண்ணுவேளோ?"

"என்னடா பண்ணனும்"

"நீங்கள் தான் ரயிலுக்குப் போறேள்"

"ஆமாம்"

"ஏழுமணியோ, எட்டுமணியோ இங்கே காத்திண்டுதான் இருக்கப் போறேன்"

"ஆமாம்"

"நான் அத்தனை நாழி காத்திண்டிருக்கமுடியாது. அப்பாவுக்குத் தெரிந்தால் அடிக்க வருவார். இருட்டிலே தனியாய் அவ்வளவு தூரம் வீட்டுக்குத் திரும்பிப் போவதும் ரொம்ப அசௌகரியம். நீங்கள் ஒன்று பண்ணினால் ரொம்ப உபகாரமாயிருக்கும்"

"என்னடா! சொல்லேன்."

"இந்த லெட்டரை—நீங்கள்"

"சரிடா, இதுதானா பிரமாதம்? கொடு, போட்டுவிடுகிறேன்."

"நல்ல வேளை மாமா! இந்தாருங்கோ லெட்டர்—இந்தாருங்கோ இரண்டணா."

"அணா வேண்டாம்டா—நீயே வைத்துக்கொள்"

"இந்தாங்கோ மாமா! எப்படி ஸ்டாம்பு ஒட்டிப்போடுவேள்"

'நான் ஒட்டிக்கிறேன் நீ போ! போகச்சே நாலு பழத்தை வாங்கித் தின்றுவிட்டுப்போ பாவம்!"

அய்யாப் பயலுக்கு வாயெல்லாம் பல்லாய்ப்போய்விட்டது. கடிதத்தை மணியிடம் கொடுத்து அணாவை இடுப்பில் செருகிக் கொண்டு நடையைக் கட்டினான். மணி லெட்டரின் அட்ரஸைப் பார்த்தார். 'ஸீதாராமன், C/O

"………முகமலர்ச்சியை வரவழைத்துக்கொண்டு சாமாபிள்ளை அய்யாப்பயல் ஸ்டேஷனுக்கு வந்த காரணத்தை விசாரிக்கலானார்………"

வெங்கடசுப்பையர் மதராஸ்'' என்று எழுதியிருந்தது. பணியின் மனதில் பலத்த சந்தேகங்கள் எழுந்தன. கடிதத்தைச்சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு தன் பூர்வ ஸ்தானத்தைத் திரும்பிப் பார்த்தார். பெஞ்சி காலியாயிருந்தது—படுக்கை ஞாபகமும் வந்தது. வெகு நாழியாய்ப் பேசிக்கொண்டிருந்து விட்டோமே என்ற அதிர்ச்சி மனதைத் தாக்கியது. பெஞ்சியின் கீழ் படுக்கை இவர் வைத்தபடியே இருந்தது. விரைந்து சென்றார் பெஞ்சிக்கு. அதில் உட்கார்ந்துகொண்டு படுக்கையை வெளியில் இழுத்தார். அதன்மேல் செருகியிருந்த டார்ச்சு லைட்டு? ஆஹா!-டார்ச்சு லைட்டு!—ஐயய்யோ! டார்ச்சு லைட்டைக் காணோமே! படுக்கையைத் தூக்கி பெஞ்சியின்மேல் வைத்துப் புரட்டிப் பார்த்தார். கீழே விழுந்து ஓடியிருக்குமோ, என்று கண்களால் எட்டியமட்டும் தேடினார். ஒருவிடத்திலும் டார்ச்சுலைட்டைக் காணோம்! காணோம்! போய்விட்டது! கெட்டுத்தான் போய்விட்டது! ஆம் திருட்டுத்தான்! இங்கே உட்கார்ந்திருந்தவர்கள்? ஐயய்யோ! அருமையான டார்ச்சு லைட்டாச்சே! மூன்று பாட்டரி லைட்டாச்சே! இப்போது 30 ரூபாய் கொடுத்தாலும் கிடைக்காதே! அட பாவிகளா? என்ன டிரஸ்ஸு, என்ன டாம்பீகம்! என்ன அட்டகாசம்! அவர்களை விட்டு அது போகவில்லை! போலீஸ்! போலீஸ்!!

மணியின் பரிதாபத்தையும் எதையோ தேடுகிற பரபரப்பையும் கவனித்து சில ஜனங்கள் விவரம் விசாரிக்கலானார்கள். மணி கொஞ்ச தூரத்தில் ஒரு சிகப்புத் தலைப்பாகையைப் பார்த்ததும் "ஐயா! போலீஸ்!" "ஐயா! போலீஸ்!" என்று கூக்குரலிட்டார். சில ஜனங்கள் ஓடிப்போய் ஒரு போலீஸ் கான்ஸ்டேபிளைக் கொண்டுவந்தார்கள். மணி டார்ச்சு லைட்டின் அடையாளத்தையும், சந்தேகிக்கப்பட்ட மூன்று மனிதர்களின் அடையாளங்களையும் வருணித்து அதிகப்படபடப்புடன் தட்டுத்தடுமாறும் வார்த்தைகளைக் கொட்டினார். இதற்குள் ரயில் வர மணிஅடித்தது—டிக்கட் ஜன்னலும் திறக்கப்பட்டது.

(தொடரும்)



லூயிக்ளீவர் என்ற பெயருள்ள இவர் எலிகளையெல்லாம் சர்க்கஸுக் துப் பழக்குகிறார். ராசெஸ்டரில் இவர் 600 சுண்டெலிகள் உள்ள ஒரு பண்ணையை நடத்துகிறார். இவை ஆராய்ச்சிசாலைகளுக்கு அனுப்பப்படுகின்றன. படத்தில் அவர் சுண்டெலியோடு விளையாடுகிறார்.



விரோதத்துக்குச் சிறந்த உதாரணம் எலியும் பூனையும்! ஆனால் இப்பழமொழியைப் பொய்யாக்கும் சம்பவத்தைப் படத்தில் பாருங்கள். க்ளீவர் வளர்க்கும் சுண்டெலிகளில் சில க்ளீவர் வளர்க்கும் பூனையின் காலடியில் உற்சாகமாக உருட்டி விழித்துப் பார்க்கின்றன; விளையாடுகின்றன. பூனை உற்று அவற்றைக் கவனிக்கிறது!

மாதர் மஹா சபை

-குங்குமம்

'உங்கள் மன்னியின் தகப்பனாருக்கு உடம்பு சரியில்லையாமே?' என்று பானு ருக்குவைக் கேட்டாள்.

'ஆமாண்டி, பாவம். திடீரென்று படுத்துக்கொண்டு விட்டாராம். காலையில் எழுந்து வயலுக்குப்போய் எல்லாவற்றையும் கவனித்துவிட்டு வந்து ஸ்நானம் செய்துவிட்டுச் சாப்பிட்டு எழுந்தாராம். 'உடம்பு என்னமோபோலிருக்கிறது. நாழி கழித்துச் சாப்பிட்டதனாலோ என்னவோ, ரொம்ப ஓய்ச்சலாக இருக்கிறது. கைகால்களெல்லாம் 'விட்டு'ப் போகிறது' என்று ரேழித்திண்ணையில் படுத்தவர் படுத்தவர் தானும். அப்புறம் எழுந்திருக்கவே இல்லையாம். வைத்தியரை அழைத்துக் காண்பித்தால் பாரிச வாயு என்று சொல்லிவிட்டாராம். கை கால்களை அப்படி இப்படி திருப்பமுடியவில்லையாம். வாய் பேச முடியவில்லையாம். நாக்கு திரும்பவில்லை. ஞாபகம் மாத்திரம் நன்றாக இருக்கிறதாம்' என்றாள் ருக்கு.

'உடம்புக்கு வருகிறது சகஜந்தான். இந்தமாதிரி ஞாபகம் இருந்து பேசமுடியாமல் இருக்கிறதே அதுமாத்திரம் ரொம்ப பரிதாபமான விஷயம். பாவம்!' என்றாள் பானு.

'ரொம்ப கஷ்டந்தான். எங்கள் மன்னி ஒரு தரம் சொல்லியிருக்கிறாள். அப்பொழுது ஊரில் ஒரே திருடர் பயமாம்' என்று ருக்கு சொல்லி முடிப்பதற்குள், 'இப்பொழுது சென்னப்பட்டணத்தில் இருக்கிற மாதிரி' என்றாள் சாந்தா.

'ஆமாம், இதேமாதிரிதான். எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தார்களாம். பாதிராத்திரி இருக்குமாம். அறையில் ஏதோ சலசலவென்று ஓசை கேட்டதாம். கண்களைத் திறந்து பார்த்தால் எமகிங்கரர்கள்மாதிரி தடிதடியாக ஐந்தாறு திருடர்கள் நின்றுகொண்டிருக்கிறார்களாம். ஒருவன் பீரோவைத் திறந்து கொண்டிருக்கிறானும். அதில்தான் வெள்ளிப்பாத்திரங்கள், நகைகள், புடவைகள் எல்லாம் வைத்திருக்கிறது...' என்று ருக்கு சொல்லுகையில், 'கூச்சல் போடுவோமென்பதற்கு தான் ஆசையில்லையா?' என்றாள் பானு,

'கூச்சலாவது, கதையாவது. ஊங்கொட்டினால் அதோடு சரிதான், பக்கத்தாத்து மாமாமாதிரிமண்டையில் தையல்போட்டுக் கொள்ள ஆஸ்பத்தி

ருக்கு சொல்லுகிறாள்

★

'யாரடி அது, ஹேமாவா? கொஞ்சம் திரும்பு பார்க்கலாம் என்றேன்.

'என்ன விசேஷம்?' என்று சொல்லிக் கொண்டே திரும்பினாள் ஹேமா.

நான் எத்தனையோ தரம் சொல்லியிருக்கிறேன் 'புலியைப் பார்த்து பூனை சூடிக்கொள்ளும்' நாகரிகத்தைப்பற்றி.

உடம்பு கொஞ்சம் சதைப்பற்றுடன் காத்திரமாக இருந்து தலையில் மயிர் அடர்த்தியாகவும் நீளமாகவும் இருந்து அதை நுனியில் சேர்த்துப் பின்னாமல் 'குஞ்சம்' மாதிரி விட்டால் அது பார்ப்பதற்கு நன்றாக இருக்கும்.

அதைப் பார்த்து விட்டு, இரண்டு வருஷ காலம் ஜுரத்தில் படுத்துக்கொண்டிருந்ததுபோன்ற உடம்பும், நான்கு சவுரிகள் வைத்துக்கொண்டால் கூடப் பருமனாக எடுத்துக் காட்டாமலிருக்கும், அடர்த்தியும் நீளமும் இல்லாத மயிரையும் உடைய ஹேமா பின்னலை நுனியில் சேர்த்துக் கட்டாமல் அவிழ்த்த மாதிரி விட்டுக்கொண்டு வந்தால் கொத்தவரைக்காய் ஞாபகம்தான் வருகிறது. கோரம் சகிக்கவில்லை!

ரிக்குப்போகவேண்டியதுதான். முன்பெல்லாமாவது திருடர்கள் வருவார்கள். மனுஷ்யன் கையைக் காலைக் கட்டிவிட்டு கூச்சல்போட முடியாமல் வாயில் துணியைச்சுற்றி அடைத்துவிட்டுத் தங்கள் வேலையை முடித்துக்கொண்டு போவார்கள். இப்பொழுது என்னவென்றால் கையில் தடி, கத்திகளுடன் வருகிறார்கள். ஊங் கொட்டினால் மண்டையில் போட்டு விடுகிறார்கள். அதற்காக, திருடர்கள் வந்திருக்கிறார்கள் என்பது தெரிந்தால்கூட ஒன்றும் தெரியாததுபோல் கண்ணை மூடிக்கொண்டு குறட்டை விட்டுக்கொண்டிருக்க வேண்டியதுதான்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'அதெப்படி மாமி, அந்தமாதிரிகூட கண்ணெதிரில் திருடன் நம்முடைய சொத்துக்களைக் கொள்ளையிட்டுக்கொண்டு போகும்போது வாயை மூடிக்கொண்டு பார்த்துக்கொண்டிருக்க முடியுமா?' என்றாள் விமலா.

'வேறு வழி? உயிரில் ஆசையிருந்தால் வாயைத் திறக்கக்கூடாது. உயிர் போனால் போகிறது, பணம்தான் பிரதானம் என்ற எண்ணமிருந்தால் கூச்சல் போடலாம்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'அதென்ன மோம்மா, சொத்து கொள்ளைபோகும்போது பேசாமல் பார்த்துக்கொண்டிருப்பதென்றால் என் மனசு கேட்காது, என்றாள் விமலா.

அதைத்தான் நானும் சொல்லவந்தேன். திருடர்கள் பீரோவிலிருந்து சாவகாசமாக எல்லாவற்றையும் எடுத்து மூட்டை கட்டிக்கொண்டு போகிற வரையில் 'கம்'மென்று கண்ணை மூடிக்கொண்டு படுத்துக்கொண்டிருந்தாராம். அப்புறம் மன்னியின் தகப்பனார் சொன்னாராம். உலகத்திலே மனிதன் வயிற்றுவலி, கண்வலி எதை வேண்டுமானாலும் கூச்சல் போடாமல் சகித்துக்கொண்டிருந்து விடலாம். ஆனால் கண்ணெதிரே திருடர்கள் கொள்ளை யடிக்கும்போது பேசாமல் பார்த்துக்கொண்டிருக்கிறதென்கிற விஷயம் இருக்கிறதே, அம்மம்மா ரொம்பகஷ்டம், ரொம்பகஷ்டம் என்று சொல்லி மாய்ந்து போய்விட்டாராம். எதற்காகச் சொல்ல வந்தேனென்றால் அதேமாதிரிதான் இப்பொழுதைய உடம்பும். அதாவது மனுஷ்யனுக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது. எல்லோரையும் எல்லா வஸ்துவையும் பார்க்க முடிகிறது. அவர்கள் சொல்வதெல்லாம் நன்றாகத் தெரிகிறது. ஆனால் கைகால்களை அசைக்க முடியவில்லை. தன் மனசிலுள்ளதைத் தெரியப்படுத்த முடியவில்லை. எதிரே இருப்பவர்கள் சொல்வதையெல்லாம் தெரிந்துகொள்ள முடிகிறது' என்றாள் ருக்கு.

'பாவம்! ரொம்ப பரிதாப விஷயந்தான். கடைசி காலத்தில் யார் யாரிடமோ எவ்வளவோ விஷயங்கள் சொல்ல வேண்டுமென்ற எண்ணங்கள் இருக்கும். மனது அடித்துக் கொள்ளும்! ருக்கு சொன்ன மாதிரி கண்ணெதிரில் திருடன் கொள்ளையடித்துக்கொண்டு போகும்போது பேசாமல் பார்த்துக்கொண்டிருக்கிற கதைதான் இது பாவம்! அவர் மனது எப்படித்தான் தவித்ததோ?' என்றாள் விமலா.

'உங்கள் மன்னியின் பேரில் பிராணனுமே அவருக்கு' என்றாள் சரோஜா.

'அசாத்திய ஆசைபாவம்! என்ன செய்கிறது. பெண்ணாகப் பிறந்தால் ஒரு நாள் இல்லாவிட்டாலும் ஒரு நாள் அகமுடையான் வீட்டுக்குப்போய்த்தானே ஆகவேண்டும்? ஒரே பெண்ணாக இருந்தாலும் மாப்பிள்ளையையும் பெண்ணையும் வீட்டோடு, வைத்துக்கொண்டிருந்துவிடலாம்' என்று ருக்கு சொல்கையில்பிள்ளைகள் ரெண்டு பேர் இருக்கிறார்கள் போலிருக்கிறதே,' என்றாள் பானு.

'ஆமாம் இருக்கிறார்கள். அவர்



"............தடி தடியாக திருடர்கள்.............."

களுக்குக் கூட மன்னியிடத்தில் அதிக ஆசை தான். போன மாஸம் கூட பெரியவன் அரக்கில் கெட்டிக்கரைப் புடவை ஒன்று வாங்கிக் கொடுத்தான். அதற்குக் கொஞ்ச நாளைக்குமுன்பு தான் சின்னவன் பெங்கால் சில்க் ஒன்று வாங்கிக் கொடுத்துவிட்டுப் போனான். ரொம்ப ஆசையாகத்தான் இருக்கிறார்கள். இருந்தாலும் வீட்டிலேயே இருக்கிறதென்றால் முடியுமா? இவர்களுக்கு வேண்டுமானால் மன்னிகூடப்பிறந்தவள், ஆசை இருக்கவேண்டியது நியாயம். அவர்களுடைய அகமுடையாள்கள் அயலார் வீட்டுப் பசங்கள் தானே' என்றாள் ருக்கு.



''வைத்த கண்ணை எடுக்காமல் மன்னியையே......''

'அது வாஸ்தவந்தான். அதெல்லாம் அதது இருக்க வேண்டிய இடத்தில் இருப்பது தான் அழகு. எப்பொழுதும் கொஞ்சம் ஒதுங்கி இருந்தால் தான் கௌரவமாக இருக்கும்' என்றாள் சரோஜா.

'வம்பு என்று தெரிந்தது தான் உங்கள் மன்னி போயிருக்கிறாளோ?' என்றாள் வசந்தா.

'அதற்காகத்தான் போயிருக்கிறாள். மன்னி எதிரில் போய் நின்றாளாம். இரண்டு மூன்று நிமிஷகாலம் 'வைத்த கண்ணை எடுக்காமல்' மன்னியையே பார்த்துக்கொண்டிருந்தாராம். கண்களினின்றும் நீர் பல பல வென்று பெருகி ஓடியதாம்,' என்று ருக்கு சொல்லுகையில்,

'பாவம்! வாய்தான் அடைத்துப் போய்விட்டதே. என்ன சொல்ல வேண்டுமென்றிருந்தாரோ பாவம்!' என்றாள் சரோஜா.

'ரொம்ப நாளாகவே சொல்லிக்கொண்டிருந்தாராம். மன்னியின்பேரில் மூன்று ஏக்கர் நிலத்தை எழுதிவைக்க வேண்டும் என்று' என்றாள் ருக்கு.

'அதைத்தான் பிள்ளைகளிடம் சொல்லவேண்டுமென்று இருக்கும், பேசமுடியவில்லை. மனது தவித்திருக்கும் பாவம்!' என்றாள் பானு.

'அதற்கென்ன, பிள்ளைகளுக்கும் இவளிடத்தில் ஆசை அதிகம். நாளைக்கே எழுதிக் கொடுத்து விடுகிறார்கள்' என்றாள் விமலா.

'நன்றாகச் சொன்னாய்! எல்லாம் அவர் மூச்சுடன் இருக்கிற வரைக்கும் தான். 'தேரோடு போயிற்று திருநாள். தாயோடு போயிற்று பிறந்தகத்து உறவு'. இது தெரியாதா? தாயார் தான் நாலு வருஷத்துக்கு முன்னாடியே போய்விட்டாள். இவரும் கண்ணை மூடிக்கொண்டு விட்டால் உடன்பிறந்தார்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தால்கூட அவர்களுடைய பெண்டாட்டிகள் ஒரு துரும்பு என்றால் துரும்பைக்கொடுக்க விடுவார்களா, தெரியுமா? இதென்ன நீகூட இப்படி உலகம் தெரியாமல் பேசுகிறாயே? அத்துடன் அண்ணா கண்டிப்பாக மன்னியிடம் சொல்லிவிட்டானும். அவர்களாக ஏதாவது பிரீதியாக இஷ்டப்பட்டுக் கொடுத்தால் கொடுக்கட்டும். அம்மா சொல்லிக்கொண்டிருந்தாள். அப்பா சொல்லிக்கொண்டிருந்தார் என்று நீயாக ஒன்றும் கேட்காதே என்று; என்றாள் ருக்கு.

இல்லாமலென்ன? இவர் சொல்வதுசரிதான். கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தால் நாம் கேட்காமலே கொடுக்கப்போகிறார்கள். இஷ்டமில்லையென்றால் நான் சண்டைபோட்டால்கூடக் கொடுக்கப் போகிறதில்லை. கடைசியில் ஒருவருக்கொருவர் நிஷ்டூரம்தான் மிஞ்சும். அத்துடன் அவர்கள் சொத்து வந்தா நமக்குத் தாங்கப்போகிறதென்ற

எண்ணமிருக்கலாம்; என்றாள் பானு.

நீ வாய்க்குச்சுளுவாக வேதாந்தம் பேசி விடுகிறாய். எத்தனை பேர்கள் பிறந்தகத்திலிருந்து ஏதாவது கொண்டு வந்தால்தான் வீட்டினுள் நுழையலாம் என்று தங்கள் பெண்டாட்டிகளைப் பிறந்தகத்துக்கு அனுப்பிவிடுகிறார்கள், தெரியுமா? இதனால் சில இடங்களில் வீண் மனஸ்தாபம் ஏற்பட்டு பெண்டாட்டிகளைப் பிறந்தகத்திலேயே விட்டுவைத்திருக்கிறார்கள் என்றாள் சரோஜா.

யாரோ படிக்காதவர்கள், உலகம் தெரியாதவர்கள் செய்தால் அதைச் சொல்லிக்கொண்டிருக்கிறாயாக்கும். திருப்பித் திருப்பி அடுத்தகத்து அப்புனுவைச் சொல்வாய். அது தான் அசத்து, படிப்பு வாசனையே கிடையாது. பிழைக்கத் துப்பு இல்லாதது' என்றாள் ருக்கு. குடும்பங்களில் பிறந்து, பி. ஏ; எம். ஏ. இன்னும் என்னென்னவோ பட்டங்களையெல்லாம் பெற்றுவிட்டு பெரிய உத்யோகங்களில் நாலுபேருக்கு மனுஷ்யன்களாய் இருக்கிறதுகளே, அதுகளில்கூடச் சிலதுகள் இப்படித்தான் இருக்கிறதுகள். அவ்வளவு தூரம் போவானேன். அதோ எதிரகத்து சுந்துரு இருக்கிறானே. பி. ஏ. பாஸ் செய்திருக்கிறான். நல்ல சொத்து இருக்கிறது. மூவாயிரம் ரூபாய்க்குச் செய்து கொண்டுவிட்டால்தான் பெண்ணை வீட்டுக்கு அழைப்பேன் என்று தாயார், தகப்பனார் சொன்னால் அவர்கள் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு குதிக்கிறதே, பார்த்துக்கொண்டுதானே இருக்கிறோம்,' என்றாள் சரோஜா.

'அதெல்லாம் மனித வர்க்கத்தைச்சேர்ந்ததென்றா நினைக்கிறாய்? பகுத்தறிவில்லாத மிருகங்கள். அதெல்லாம் பணம் பிடுங்கிகள், விவேகமிருந்தால் அப்படியெல்லாம் சொல்லுங்களோ? படித்துவிட்டால் மட்டும் ஆகிவிட்டதா? விவேகம், மானத்தில் திருஷ்டி, அதெல்லாம் வேண்டாமோ?' என்றாள் பானு.

'அதுகள் எப்படியாவது ஒழியட்டுமடி. உங்கள் மன்னி ஊருக்குப்போய் விட்டாளே. உங்கள் அண்ணா உங்களகத்தில்தான் இருப்பார்?' என்றாள் சாந்தா.

'இருக்கலாம், ஆனால் அவன் சமையல் செய்துகொண்டு விடுவான்' என்றாள் ருக்கு.

'சமையல் செய்து சாப்பிட்டுவிட்டு ஆபீஸ் போய் வருவது கஷ்டமாக இருக்காதோ?' என்றாள் விமலா.

'கஷ்டமாவது அதைப்பற்றித்தானே சொல்ல வந்தேன். பேச்சு வேறு விஷயத்தில் போய்விட்டது. அதோ அவர் வந்துவிட்டார். மீதி நாளைக்கு' என்று எழுந்தாள் ருக்கு.



''...அண்ணா கண்டிப்பாகச் சொல்லிவிட்டானும்...''

கட்டுரையாளருக்கு

★

'சுதேசமித்திரன்'' வாரப் பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுதும் நண்பர்கள், தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையாகவே அமைக்க வேண்டுகிறோம். குறிப்பாகச் சுட்டிக்காட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ குறிப்பிடாமலிருக்க வேண்டும்.

—ஆசிரியர்

★

மெய் விளங்கிய அன்பர்கள்

பெரியபுராணப் பூங்கோயிலில்

5

சேக்கிழார் கண்ட சென்னை!

பி. ஸ்ரீ.

சேக்கிழார் தாம் கண்ட தமிழ் நாட்டை ஒருவாறு தமது பெரியபுராணத்தில் காட்டுகிறு ரென்று கருதலாம். சேக்கிழார் சிவஞானி மட்டுமல்ல: உலக ஞானமும் சரித்திரஞானமும் வாய்ந்த உத்தம மந்திரியாகவும் இருந்ததால், தமிழகத்தை நன்ருக அறிந்திருந்தார்; அக்காலத் தமிழர்களின் நாகரிக மேம்பாடு களையும், முற்காலத் தமிழர்களின் நாகரிக நிலையையும் அறிந்திருந் தார். அருட்பெருஞ்செல்வராக இருந்த இவர், பொருட்பெருஞ் செல்வராகவும், கல்விப்பெருஞ் செல்வராகவும் இருந்ததாலும், சோழச்சக்கிரவர்த்தியின் முதல் அமைச்சராக இருந்ததாலும், பொதுவாகத் தமிழர்களையும், தமிழ்நாட்டையும், சிறப்பாகச் சிவனடியார்களையும் குறித்துத் தெரிந்து கொள்வதற்கு விசேஷ வசதிகள் கிடைத்திருக்கவேண் டும்.

நம் சென்னை தெரியுமா?

இவ்விதமாக எண்ணமிட்டு, 'சேக்கிழார் கண்ட தமிழ் நாட் டை'க்குறித்து ஒரு நண்பரிடம் பிரஸ்தாபித்ததும், அவர் பளிச் சென்று வேடிக்கையாக, 'சேக்கிழார் பெருமான் நமது சென்னை மாநகரைக் கண்டு களித்ததுண்டா?' என்று கேட் டார்.

'சென்னைமாநகரத்தின் வயது முந்நூறுதான்; இது சேக்கிழார் காலமாகிய பன்னிரண்டாம் நூற் ருண்டில் இல்லை' என்பது அவ ருக்கும் தெரியும். சிறந்த நாக ரிகமே வெள்ளையர்களுடன் இறக்குமதியாகிச் சென்னைமா நகருடன் வளர்ந்துவந்த தென்பது நண்பர் எண்ணம். ஆகவே 'சேக்கிழார் கண்ட தமிழ் நாட்டில் மாட்டுவண்டி-நாகரிகம் தானே இருந்திருக்கமுடியும்? தற் கால ரயில்—மோட்டார் நாகரிக வசதிகள் இல்லையே அத்தகைய தமிழ்நாட்டை அவர் கண்டபடி நாமும் கண்டு அந்தப் பழைய உலகக் கஷ்டங்களை நாமும் மான ஸிகமாக அனுபவிக்க வேண் டுமா?' என்ற கருத்துடன்தான் அவர் அக்கேள்வி கேட்டார்.

அக்கேள்விக்கு விடையாக நான், சென்னைமாநகர் இருக்கும் இப்பிரதேசத்தைச் சுவாமிகள் பார்த்திருப்பார். எனினும் தமது செல்வமலி குன்றத்தூர்'' போல் இயற்கை வளம் இல்லையே என்று எண்ணியிருப்பார்' என்றேன்.

ஓடம் வண்டியில், வண்டி ஓடத்தில்!

சென்னை நகரம் உள்ள நிலப் பகுதி அந்நாளில் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தது. தொண்டைமண்டலம் 24 'கோட் டங்கள்' என்ற பிரிவுகளாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது. வடக்கி லுள்ள திருப்பதி மலைக்கும், தெற் கே ஓடும் பெண்ணையாற்றுக்கும் இடையே உள்ள இந்நிலப் பரப் பில புழற்கோட்டம் என்ற பிரி வில் சென்னை இருக்கும் பிரதேசம் இருந்தது. சென்னை நகரின் தாகம் தீர்க்கும் புழலேரியை நண்பரும் பார்த்திருந்தார். 'புழலேரி இருக் கும் ஊர் புழல்' இவ்வூரின் பெய ரே அக்கோட்டத்திற்கும் பெய ராயிற்று. கோட்டம் என்ற நிலப்பரப்பை 'நாடு' என்ற பல சிறு பகுதிகளாகப் பிரித்திருந் தார்கள். அந்நாடுகளில் ஒன்று எழுமூர். எழுமூரைத்தான் 'எழும் பூர்' என்றும் 'எக்மோர்' என்றும் தவருகச் சொல்லுகிறோம். அந்த எழுமூர் நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது சென்னைப் பிரதேசம், சேக்கிழார் காலத்திலே, என் றேன்.

'புழலேரியுள்ள இடமும் எழும் பூரும் அவ்வளவு பழமையும் பெருமையும் வாய்ந்தனவா?' என்று நண்பர் அதிசயித்தார். 'வண்டி ஓடத்தில் ஏறும்: ஓடம் வண்டியில் ஏறும்' என்று சொல் வதுபோல், இந்நாளில் சென்னை யின் பகுதியாக இருக்கும் எழும் பூரின் பகுதியாக இருந்ததே ஒரு காலத்தில் நம் தலைமைப்பட்டி னம்!—என்று நண்பர் அதிசயித் தார்.

குன்றத்தூரும், சென்னையும்

'புழற்கோட்டத்தை அடுத் திருந்த கோட்டத்தின் பெயர் புலியூர்க்கோட்டம். இக்கோட் டம் குன்றத்தூர் முதலான பல நாடுகளாய்ப் பிரிக்கப்பட்டிருந் தது. குன்றத்தூர் நாட்டின் தலைமை நகரமாயிருந்தது. ஆகவே குன்றத்தூர்ப் பெரி யாரான சேக்கிழார் தமது கோட் டத்தை அடுத்திருக்கும் எழுமூர்க் கோட்டத்தை நன்ருக அறிந் திருப்பார். அக்கோட்டத்தின் ஒரு பகுதியான சென்னையையும் நன்ருகப் பார்த்திருப்பார்.

மேலும் சென்னையின் பகுதியான மயிலாப்பூர் பழைய தலங்களில் ஒன்றல்லவா? குன்றத்தூரிலிருந்து மயிலாப்பூருக்கு ஒரு நல்ல சாலை பறங்கிமலை வழியாக இருந்திருக்க வேண்டும். அந்தச் சாலை வழியாக மாட்டுவண்டியிலோ, குதிரையிலோ, பல்லக்கிலோ வந்திருப்பார். அந்நாளில் குன்றத்தூர் இயற்கையழகுகள் வாய்ந்த பேரூராகவும், மயிலாப்பூர் செயற்கை யழகுகள் நிறைந்த பேரூராகவும் இருந்திருக்க வேண்டும். குன்றத்தூர் விவசாயிகளான வேளாளப் பிரபுக்கள் நிறைந்த ஊராகவும், மயிலாப்பூர் வணிகர்கள்-கப்பல் வியாபாரிகள்–வசித்த ஊராகவும் இருந்திருக்க வேண்டும். திருவல்லிக்கேணி அந்நாளில் மயிலையின் பகுதிதான். மயிலையும், திருவல்லிக்கேணியும் தான் சென்னை என்ற தற்கால நகரின் பழைய பகுதிகள். மற்ற இடங்கள் காடாகவோ, பாழ்நிலமாகவோ இருந்திருக்க வேண்டும். கடற்கரையோரத்தில் செம்படவர்கள் வசித்து வந்தார்கள். இது தான் சேக்கிழார் காலச் சென்னை மாநகரம்!" என்றேன்.

சேக்கிழாரின் மயிலாப்பூர்

நான் சொன்னதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த நண்பர், 'அப்படியா செய்தி? நமது மயிலாப்பூரைச் சேக்கிழார் பார்த்திருக்கிறாரா? அப்படியானால் அவர் கண்ட மயிலாப்பூரை நாமும் கண்டு களிக்கலாமா?' என்று கேட்டார். அதற்கு நான், 'திவ்யமாகப் பார்த்து வருவோம்' என்று பதில் சொல்லி விட்டு,

> பன்னு தொல்புகழ்த் திருமயி-
> லாபுரிப் பதியில்

என்ற சேக்கிழார் செய்யுளடியை முதன் முதல் எடுத்துக் காட்டினேன். 'பழம் புகழ்வாய்ந்த மயிலாபுரி' என்று சேக்கிழாரே கூறுவதால் சென்னையின் இப் பகுதி சேக்கிழார் காலத்திலேயே பழமையான நகரமாய்க் கருதப் பட்டதென்றேன்.

மயிலைக் கடற்கரை

மயிலாப்பூரின் கப்பல் வியாபாரச் சிறப்பைச் சேக்கிழார் பின் வருமாறு சுட்டிக் காட்டுகிறார்:

> அருநி தித்திறம்
> [பெருக்குதற்கு,
> அருங்கலம் பலவும்
> பொருகடல் செலப்
> [போக்கி, அப்
> பொருட்குவை நிரம்ப
> வருமரக்கலம்,
> [மனைப்படப்,
> பணைக்கரை நிரைக்கும்
> இருநி திப்பெருஞ்
> [செல்வத்தின்
> எல்லையில் வளத்தார்.

[அருநிதித்திறம் – அருமையான பொருள்வகைகளை. அருங்கலம்– அருமையான கப்பல்கள். பொருகடல்-அலைமோதும்கடலில். செல-செல்லும்படி. பொருட் குவை-பொருள்களின் குவியல். வருமரக்கலம்-வருகிற கப்பல்கள். மனைப்பட-வீட்டில் சேர. பணைக் கரை–பெரிய கடற்கரையில். நிரைக்கும்-வரிசையாக வைக்கப்படும். எல்லையில் வளத்தார்-எல்லையில்லாத பொருள் வளமுடையவர்கள்.]

அருமையான மரக்கலங்களை (பாய்கட்டிக் கப்பல்கள் தாம்) அலைமோதுங் கடலில் செலுத்திக் கொண்டு போகிறார்களாம் மயி



மஹாபோதி சங்கத்தின் அங்கத்தினர்கள், சங்கத் தலைவர் டாக்டர் சியாமப்பிரஸாத முகர்ஜியுடன் சென்று பிரதம மந்திரி பண்டித நேருவைச் சமீபத்தில் சந்தித்தார்கள். இந்தியாவிலுள்ள பர்மிய தூதர் யு வின் அப்போது பிரசன்னமாயிருந்தார். புத்த பெருமானின் சிஷ்யர்களது ஸாரிபுட்டா, மோகல்லன்னா புனித சின்னங்களை இந்தியாவில் பிரதிஷ்டைசெய்வது குறித்து நேருவோடு விவாதம் நடந்தது. இலங்கை அதிகாரிகள் அவற்றை இந்தியாவுக்கு வழங்கச் சம்மதம் தெரிவித்தது நேயர்களுக்கு நினைவிருக்கும். சாஞ்சி என்ற விடத்தில் புதிதாக நிர்மாணமாகும் விஹாரத்தில் அவை வைக்கப்படும்.

லைப் பெருவணிகர்கள், மலாய் நாடுகள் முதலான பிரதேசங்களுக்குச் சென்று செல்வங்களை வகைவகையாகச் சம்பாதித்துக் கொண்டு வரும் பொருட்டு அம் மரக்கலங்கள் எவ்வளவு காலத்திற்குப்பின், எத்தனை அபாயங்களைச் சமாளித்துக்கொண்டு, திரும்பி வருகின்றன! எத்தனை பெரும்பொருட் குவியல்களோடு வருகின்றன! அந்த நிதி வகைகளை அப்படியே குவியல் குவியலாக அந்த நீண்ட கடற்கரை மணற்பரப்பில் வரிசை வரிசையாகக் குவித்து வைத்திருக்கிறார்களாம். இத்தனை செல்வங்களும் இனிமேல் இவ் வர்த்தகர்களின் மாளிகைகளுக்குப் போய்ச் சேர வேண்டியதுதான்! இவற்றையெல்லாம் வைத்துக் கொள்ள அந்த மனைகள் தாம் அரண்மனைகள்போல் இருக்க வேண்டுமல்லவா?' என்று தெரிந்து வியப்படைகிறோம்.

இத்தகைய செல்வச் சிறப்பு வாய்ந்த மயிலாப்பூரைச் சேக்கிழார்,

> ஆழி சூழ்மயி லாபுரித்
> திருநகர்

[ஆழி-கடல்.

என்று வாய்குளிர வருணிக்கிறார் என்றேன். நண்பரும், 'ஆழிசூழ் மயிலாபுரித் திருநகர்' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே, 'என்ன அழகான சொற்றொடர்! 'ஸாந்தோம்' கடற்காற்று வீசுவதுபோலிருக்கிறது!' என்று மகிழ்ந்தார்.

அகநகரும் ஆலயமும்

'இப்படிக் கடற்கரையைப் பார்த்திருக்கும் சேக்கிழார் பெருமான் நகரத்திற்குள்ளும் போய்ப் பார்த்து,

> மாடம் ஓங்கிய மயிலைமா
> நகருளார்

என்று, அந்த வானளாவிய மாட மாளிகைகளையும், அம்மாளிகைகளில் குடியிருக்கும் 'ஓங்கிய' உள்ளங்களையும்கூட எவ்வளவு எளிதாய்க் காட்டிவிடுகிறார்! என்றேன்.

மயிலாப்பூருக்கு அணிகள் அம் மாடமாளிகைகளும் வர்த்தக மன்னர்களின் அரண்மனைகளும் என்றால், நடுநாயகமான மெய்யணி கபாலீசுவரரின்கோயில்என்பதையும் உய்த்துணரவைக்கிறார் சேக்கிழார். அக்கோயிலையும் 'துங்க நீள் சுடர்க் கோபுர'த்தையும் உருக்கமாக வருணித்திருக்கிறார்

இப்படிச் சொல்லிவிட்டுத் 'திருஞான சம்பந்தமூர்த்திசுவாமிகள் புராண'த்திலிருந்து, அந்த அதிசயச் சிறுவர் மயிலாப்பூருக்கு வந்து நிகழ்த்திய அதிசயத்தைக் குறித்துச் சேக்கிழார் பாடியிருக்கும் பாடல்களை வாசித்துக் காட்டினேன்.

நண்பருக்கு ஒரே மகிழ்ச்சி. 'சேக்கிழார் கண்ட சென்னையைக் கண்டு கொண்டேன்!' என்று ஒப்புக்கொண்டார்.

பி. ஏ. வகுப்பில், நஞ்சுண்டசாமி சரித்திரத்தில் ஒரு பகுதியை விளக்கிக்கொண்டிருந்தார். நான் எனது வாழ்க்கைச் சரித்திரத்தில் ஒரு பகுதியை கனவு கண்டுகொண்டிருந்தேன் அப்பொழுது. கவனம் நஞ்சுண்டசாமி என்ன சொல்கிறார் என்பதில் லயிக்கவில்லை. லலிதாவின் ரூப செளந்தரியத்தை அள்ளிப் பருகிக்கொண்டிருந்தன என் கண்கள். அவளிடம் சம்பாஷித்திருக்கிறேன். சாதுர்யமாக அவள் பேசுவதிலும், அவளது குரலின் இனிமையிலும் எனது ஹிருதயத்தைப் பறிகொடுத்துவிட்டேன். இதுதான் காதலின் மின்மினிப்பு உணர்ச்சிகள் போலும்! நேற்றுதான், அவளுக்குச் சுருக்கமாக "காதல் உன் மனதில் உதித்திருந்தால் நான் உன்னை மணமுடிக்கத் தீர்மானித்திருக்கிறேன். சம்மதமா?" என்று ஒருகடிதம்கூடஎழுதி அனுப்பியிருந்தேன். இக்கடிதம் நூதனமானதுதான். என்ன செய்வது! காதற்கடிதங்களை எழுதுவதில் எனக்குத் திறமையில்லை. ஏனெனில் பல காதற்கடிதங்களை எழுத, எனக்கு எவ்வகை சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை. சந்தர்ப்பங்களை வலுக்கட்டாயமாக ஏற்படுத்திக்கொள்ளத் தகுந்த பெண்ணையும் நான் சந்தித்ததில்லை இதுவரை. இதுதான் எனது முதல் காதல் கடிதம். பதில் எப்பொழுது கிடைக்குமென்று மனம் ஏங்கிக்கொண்டிருந்தது. சரித்திர வகுப்பும் முடிந்துவிட்டது. லலிதா, என்னிடம் வந்து, தன் கையிலுள்ள புத்தகத்தைக் கொடுத்து, "42-ம் பக்கத்தில் நீங்கள் கேட்ட கேள்விக்கு விடையிருக்கிறது" என்று கூறிப்போய்விட்டாள். புத்தகத்தைப் புரட்டினேன். 42-ம் பக்கத்தில் எனது முதல் காதல் கடிதமே காட்சியளித்தது. அக்கடிதத்திலுள்ள எனது கையெழுத்துக்குக்கீழே, "எனக்கும் அவ்விதமே—லலிதா" என்று அவள் பதிலளித்திருந்தாள். இந்தப்பதிலின் பிரதிபலிப்பு எனது மூளையைக் கலங்க அடித்துவிட்டது. நான் அவளை உண்மையாகவே காதலிக்கிறேனா? காதலென்பது ஆத்மாவின் அழைப்பா? அல்லது வெறும் உறுத்தலா? வெறும் உறுத்தலின் உன்மத்தத்தினால்தான், எனது கை அக்கடிதத்தை எழுதியதா? மீண்டும் ஒருமுறை எனது கடிதத்தைப் படித்தேன். கடிதத்தின் வாசகம் மிகவும் சுருக்கமாயிருக்கிறது. அதிலிருந்து உடலின் உறுத்தலையோ, ஆத்மாவின் அழைப்பையோ பகுத்தறிய முடியுமா? நானே சிரித்துக்கொண்டேன். சாப்பிடும் விடுதிக்குச் சென்று எனது நண்பன் பாலுவைக் கலந்து, ஒரு முடிவுக்கு வரலாமென்று எழுந்தேன்.

சாப்பிடும் விடுதியில், பாலு சோகத்தின் சிகரத்தையடைந்தவன்மாதிரி உட்கார்ந்திருந்தான். என்னைக் கண்டதும் அவன் புன்முறுவல் செய்தான். அதில் உயிர் இருப்பதாகத்தெரியவில்லை. "ராமு வா, இப்படி உட்கார். உன்னிடம் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டும்" என்றான் அவன். இவனே இந்த நிலைமையிலிருக்கும்பொழுது, என்புதிரை அவனிடம் அப்படி வெளியிட முடியும்? அவன் வாழ்க்கையில் வெறுப்புத்தோன்றி விட்டது. ஏதாவது ஒரு மருந்து வாங்கிக்கொண்டு எனது ஆத்மாவுக்குச் சாந்தி அளித்துவிடு" என்று பதட்டத்துடன் உரைத்தான். தற்கொலையா? ஏன்? எதற்கு? "சே என்னபாலு ஏதோ உளறுகிறாயே! வாழ்கையில் வெறுப்புத்தோன்றினால், அதை விருப்பாக மாற்றவல்லவா மருந்து தேட வேண்டும். விஷயத்தைச் சொல்லேன்" என்று வற்புறுத்தினேன். கேட்டால் சிரிக்கமாட்டாயே. எல்லாம் காதல் தான்...என்னுடைய ஆத்மாவின் அழைப்பு அது. அந்தப்புனித அழைப்புக்கு அருகதையற்றவள் அவள். ஆகவே முடிவு, ஆத்மாவையேவிடுதலை செய்தாக வேண்டும்" என்றான் அவன். "யாரப்பா அவள்?" என்னால் முடிந்தால் அவளைக் கண்டு பேசி......என்பதற்குள், பாலு "அதெல்லாம் முடியாத காரியம். அவள் கோபுவிடம் எனது வினவுக்குப் பதிலளித்திருக்கிறாள்" என்றான். அவன் மனது படும் வேதனையில், அவன் எனக்கு அவனது காதல் சரித்திரம் பூராவும் தெரிந்து போயிருக்கிறது என்று நினைத்துவிட்டான்! முடிவை மட்டும் விளக்குகிறான்!

"பாலு நீ சொல்வது ஒன்றும் புரியவில்லை. நீ அவளைக் காதலித்தாய். அவள் உன்னிடம் ஒன்றும் கூறாமல், நமது கோபுவிடம் சென்று, 'முடியாது' என்று பதிலளித்திருப்பாள்" என்றேன்.

"முடியாது" என்று பதிலளித்திருந்தால்தான் தேவலையே. 'சரி' என்றல்லவோ அவள் கோபுவிடம் கூறியிருக்கிறாள் என்றான் பாலு.

"சரி" என்றபிறகு நீ ஏன் சலிக்கிறாய்?' என்றேன். பாலு நீ ரொம்பபுத்திசாலி என்று நான் நினைத்தது மடத்தனம். கோபு அவளிடம் "நான் உன்னைக்காதலிக்கிறேன். மணம் முடித்துக் கொள்வோமா?" என்று ஏதேதோ உளறவே, அவள் அதற்குச் "சரி" என்று கூறியிருக்கிறாள்' என்றான். எனக்கு இப்பொழுதுதான் அவனது காதல் சரிதத்தின் விவரம் தெளிவாயிற்று.

'யாரப்பா அவள்? காதலின் புனிதத்தைப் புரிந்து கொள்ளாதவள்?" என்றேன். "லலிதாதான்" என்றான் பாலு

நான் எங்கிருக்கிறேன் என்று எனக்கே புரியவில்லை. அவன் சொன்னதைக் கேட்டதும், தலை சுற்றியது. சமாளித்துக்கொண்டு, "லலிதாவா?" என்று அழுத்தமாகக் கேட்டேன்.

"நீ செவிடா? லலிதாவேதான். லலிதாவைத் தவிர யாரையாவது கோபுவாவது நானாவது காதலிக்க இயலுமா? நீயும் அவளைக் காதலித்தால்கூட நான் ஆச்சர்யப்படுவதற்கில்லை. நாமெல்

லோரும் சமருசியுள்ள ஒரே ஜமா நண்பர்கள்தானே. இதிலென்ன ஆச்சர்யமிருக்கிறது. ம்... அது கிடக்கட்டும் ...... லாபரேடரியில் எங்கு விஷ மருந்து இருக்கிறது என்று சொல்'' என்ருன் அவன்.

''மருந்தா?....ம்... லாபரேடரியிலுள்ள ஸ்டோர் ரூமில் வலது பக்கத்திலுள்ள கண்ணுடி பீரோவில். மேல் தட்டின் இடது கோடியிலிருக்கிறது. பேர் 'ஸையனைட்' ஞாபகமிருக்கட்டும். அதில் ஒரு அவுன்ஸ் சாப்பிட்டாலே யதேஷ்டம். நீ ஒரு அவுன்ஸ் மருந்தை பாலில் கலந்து தூங்குவதற்கு முன் சாப்பிட்டுவிடு. மீதியை புட்டியுடன் என் அறையில் வைத்துவிட்டுப்போ. அதை நடுநிசியில் எங்காவது கொண்டுபோய் போட்டுவிடுகிறேன்'' என்றேன் நான்.

இவ்வளவு துணிச்சலாக, ஒரு கொலையைச் செய்ய என் மனது எப்படித் திட்டம் போடுகிறது! எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. இதுவும் எனது உடலின் உறுத்தலின் பிரதிபலிப்பு தானு. அப்பிரதிபலிப்பு காதற் பொருமையினுல் வஞ்சம் தீர்க்கும் எண்ணத்திற்கு அடிகோலி, சுவரெழுப்பி, கட்டிடம் கட்டிவிட்டதா? அவனிடம்விடைபெற்றுக்கொண்டு, மெல்ல நடந்தேன். எனது கால்கள் என்னையறியாமலேயே கோபுவின் அறையை நாடின. எனது மனதிலோ பற்பல சிந்தனை அலைகள் சிதறி அடித்து நொறுங்கிக் கொண்டிருந்தன.

கோபு சாய்வானநாற்காலியிலுட்கார்ந்து சிகரெட், பிடித்துக் கொண்டிருந்தான். அவனது முகத்தில்வெற்றியின் அறிகுறி காணப்பட்டது. 'ராமு வா. உள்ளே வா. எனக்கு அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது' என்ருன்கோபு. எனக்கு ஆவல் அதிகமாயிற்று. ''என்ன விசேஷம்?'' என்றேன், ''டிபுடி கலெக்டர் பெண் லலிதாவை மணம் செய்து கொள்ளப் போகிறேன்'' என்ருன் அவன். ''காதல் வெற்றிக்கு எனது வாழ்த்துக்கள்'' என்றேன். அவன் சிரித்தான், ''என்னப்பா ராமு? காதலாவது கத்திரிக்காயாவது! இந்தக்கலியாணமெல்லாம் என்னுடைய 'பிளான்'ப்பா கேளு. டிபுடி கலெக்டர் பெண்ணுன்ஞ நல்லவரதட்சிணை கிடைக்கும். இந்த எழவு எடுத்த படிப்புக்கு ஒரு முழுக்குப் போட்டுவிடலாம். தாலி கட்டினுல் போதும். டிபுடி கலெக்டர் வாங்கின பணமெல்லாம் என் கையிலே வராவிட்டால் பாரு. அப்பணத்தில் ஒரு பிலிம் கம்பெனி. 'ஆத்மாவின் அழைப்பு' அதன் முதல் தயாரிப்பு. உன்னைப்போல் பித்துக்கொள்ளிகள் அதை ஆவலாக அடிக்கடி பார்ப்பார்கள். எனக்கும் பணம் சேரும்..........ஹ ஹா'' என்று சொல்லிச் சிரித்தான் கோபு.

எனக்குப் பேச நாவெழவில்லை. காதலுக்கு லாயக்கற்ற கோபுவை பாலுவின் காதலுக்கு அருகதையற்ற லலிதா மணம் செய்ய ஒப்புக்கொண்டிருக்கிருள்! காதலிக்கிருள்!! இந்தச் சுழற்காற்றில் என் காதல் பறந்தது. காதல் பிறந்த மனதில் குரோதமும், வஞ்சமும் குடி புகுந்தன. வேண்டாவெருப்பாகப் புன்முறுவல் செய்தேன். சபாஷ்! சரியான பிளான் கோபு. இன்றிரவு எனது அறைக்கு வந்து விட்டுப்போ. எனது வாழ்த்துக்கறிகுறியாக ஒரு பரிசு உனக்கு அப்பொழுது'' என்றேன். 'சரி. வருகிறேன் பரிசு கொடுக்காமல் ஏமாற்றி விடாதே!'' என்ருன் கோபு.

நான் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினேன். கோபு லலிதாவின் காதலுக்கு லாயக்குள்ளவனல்ல. 'ஸையனைடி'ன் காதலுக்குத்தான் அவன் உரியவன் என்று எனது குரூர மனது ஒரு குறுக்குத் திட்டம் போட்டது. வழியில் யாரோ என் மேல் மோதினுர்கள். ''ஸாரி'' என்று சொல்லி நிமிர்ந்து பார்த்தேன். லலிதா எதிரில் நின்ருள். பிரமிப்படைந்தேன். எனினும் சமாளித்துக் கொண்டு ''லலிதா, உன்னிடம் தனியே கொஞ்சம் பேசப் பிரியப் படுகிறேன். தோட்டத்திற்குச் செல்லலாமா?'' என்றேன்.

''ஆஹா,போகலாமே'' என்ருள் அவள் சிரித்துக் கொண்டே.

தோட்டத்தில் ஆலமரத்தினடியிலே அமர்ந்தோம். ''லலிதா. உன்னுல் கொடிய விபத்துகள்

நிகழப்போகின்றன." என்றேன்.

"என்ன மிஸ்டர் ராமு. என்ன நடந்தது?" என்று ஆவலாகக் கேட்டாள் லலிதா. "என் மனது சொல்கிறது நான் உன்னைக் காதலிக்கவில்லையென்று..." என்றேன். "ரொம்ப வந்தனம் அதனால்தான் நான் அம்மாதிரி உங்களுக்குப் பதில் கொடுத்தது. தங்கள் கடிதத்தில் காதல் பிரதிபலிக்கவில்லை" என்றாள் அவள். "ம்—அது கிடக்கட்டும். நான் பாலுவிடம் பேசிக்கொண்டிருந்தேன்...பாலு உன்னை உண்மையாகக் காதலிக்கிறான்! என்றேன். அவள் "நானும் அவரிடம் பேசியிருக்கிறேன். அவர் பேசிய பேச்சில் காதல் பிறக்கவில்லை" என்றாள் லலிதா. "நீ அறியமாட்டாய், அவளது காதலின் ஆழத்தை" என்று கூறி, பிறகு பாலுவிடமும், கோபுவிடமும் நான் பேசிய விஷயங்களைக் கூறினேன். பிறகு 'லலிதா! இப்பொழுது பார் யார் உன்னை உண்மையாகக் காதலிக்கிறானென்று. கோபுவா அல்லது பாலுவா?" என்றேன். "கோபுவைப்பற்றி நீங்கள் கூறுவதை நான் நம்புவதற்கில்லை. அது சரி... ஏன் கோபுவை உங்களது அறைக்கு அழைத்திருக்கிறீர்கள்?" என்றாள் அவள். "ஸையனைட்" என்னுடைய அறையில், கோபு வரும்போது இருக்கும். அவனுக்கும் ஒரு அவுன்ஸ்" என்றேன். "எனக்காகவா நீங்கள் கோபுவை..."என்றாள். "ஆம். பாலுவுக்கு அருகதையற்றவள் நீ. உனக்கு அருகதையற்றவன் கோபு. பாலுவோ உயிர் துறக்க முடிவு செய்துவிட்டான். நானே கோபுவை......"

"சரி, புரிந்து கொண்டேன்" என்று அவள் சொன்னாள். ஏதேதோ யோசித்தாள். அவளது முகம் சிறிது பிரகாசமடைந்தது. "மிஸ்டர் ராமு நீங்கள் கூறுவதிலிருந்து உங்களது நண்பர்களிலொருவராவது என்னை உள்ளன்புடன் உண்மையாக நேசிக்கவில்லை என்று தெரிகிறது. பாலுவின் காதல் போலி ஆத்மாவின் அழைப்பு! தங்களது காதல் உடலின் உத்வேகம்! கோபுவின் காதலோ பணமூட்டையின் மோல்!...ம்... தாங்கள் எனக்காக ஒரு உதவிமட்டும் செய்யவேண்டும். கோபுவிடமும், பாலுவிடமும் நான் மிஸ்டர் கிட்டுவைக் கல்யாணம் செய்துகொள்ளப்போகிறேன் என்று கூறிவிடுங்கள். என்னை இழித்துக் கூறியாவது அவர்களது காதலுக்கு நான் அருகதையற்றவள் என்று கூறுங்கள். உயிர்களைப் பலியிடாதவாறு தடுங்கள் என்றாள் லலிதா.

"என்ன கிட்டுவையா? உண்மையாகவா?" என்றேன். அவள் சிரித்தாள். "நீங்களொருவராவது எனக்குச்சரியானவராயில்லை........ ஆதலால்தான் நான் கிட்டுவைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்.......... அதோ பாருங்கள்! கோபுவும், பாலுவும் வருகிறார்கள். நான் இம்மரத்தின் பின்னால் ஒளிந்துகொள்கிறேன். என்று சொல்லி, விரைந்து ஆலமரத்திற்குள்சென்றுமறைந்துகொண்டாள்

அவர்களருகில் வந்ததும், "கோபு! தகவல் தெரியுமா? என்றேன்." என்ன என்றானவன். லலிதாவைக் கொஞ்சநேரத்துக்குமுன் சந்தித்தேன். அவளது காதல் வெற்றிக்காக வாழ்த்துக் கூறினேன். கோபு நல்ல அதிருஷ்டசாலி என்றுகூட சொன்னேன். அவள் அதை மறுத்து கோபுவல்ல, கிட்டு என்றாள்! இதுதான் வேடிக்கை! என்றேன். கோபு அப்படியே ஸ்தம்பித்துவிட்டான். "என்னப்பா உண்மையாகத்தானா? என்றான் அவன். 'ஆம்' என்றேன். பிறகு அவர்களிடம் சகல விவரங்களையும் கூறி, கோபு! நான் உன்னைக்கூட கேவலம் லலிதாவுக்காகக் கொலை செய்யத் துணிந்துவிட்டேன். ஆனால்...இப்பொழுது நடந்திருக்கிறதைப் பார். நாமெல்லோரையும் முட்டாள்களாக்கிவிட்டாள் அவள். அவளுக்குக் காதல் என்ற உணர்ச்சியே இல்லை. அவள் ஒரு பட்டுப்பூச்சி மாதிரி மலருக்கு மலர் தாவும் சுபாவமுள்ளவள். அதற்காக நம்மில் யாரும் உயிர்ப்பலி கொடுக்கத் தேவையில்லை என்றேன். பாலு சரிதான், நீ சொல்வதிலிருந்து பொதுவாகப் பெண்பிள்ளைகளுக்குக் காதல் என்பதே கிள்ளுக்கீரைபோலிருக்கிறது. எனது ஆத்மாவின் அழைப்புக்கு அருகதையுள்ளவள் எங்கு இருக்கப்போகிறாள்? லலிதாவே இம்மாதிரி பட்டுப்பூச்சி ரகத்தைச்சேர்ந்தவள் என்று அறிந்த பின்னும், நானென்ன முட்டாளா, மறுபடியும் மற்றொரு பெண்ணைக்காதலிக்க? மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கினது மாதிரிதான். சரிதான், வாங்கப்பா...எங்கேயாவது போய்க் கவலையை மறக்கச் சீட்டாவது ஆடுவோம்" என்றான். கோபு "ராமு, நீ சொன்ன விஷயங்களைப்பார்த்தால், நீயும், பாலுவும் பித்துக்கொள்ளித்தனமா கொலை, தற்கொலையும் செய்ய முற்பட்டது முழு முட்டாள்தனம், கேவலம் ஒரு பெண்ணுக்காகவா நமது சிநேகிதத்தையும் உயிரையும் இழப்பது? நான் அப்பவே ராமு! உன்னிடம் சொல்லியிருக்கிறேன் காதலாவது கத்திரிக்காயாவது என்று. அது உண்மையாகிவிட்டது. லலிதாவானால் என்ன, லட்சுமியானால் என்ன? நல்லவேளை. நான் இது விஷயமா அவ்வளவா கவலைப்படப்போகிறதில்லை. இவளில்லாவிட்டால்,இன்னொரு பணக்காரப்பெண்ணை இந்தக்காலத்திலா பிடிக்கமுடியாது! வாங்கப்பாபோகலாம்" என்றான். நாங்கள் அவ்விடத்தை விட்டு நகர்ந்தோம். அன்றைய இரவு கழிந்த போக்கே அலாதி.

மறுநாட் காலை, கவலையற்று எழுந்தேன். தினசரித்தாளை வழக்கம்போல் புரட்டிப்பார்த்தேன். அதில் "காதலால் காலனுக்குப் பலி" என்ற தலைப்பின்கீழ்" நேற்றிரவு பெரிய தெருவிலுள்ள டிபுடி கலெக்டர் கனக சுந்தரத்தின் மகள் லலிதா 'ஸைனைட்' என்ற விஷத்தையுண்டு தற்கொலை செய்துகொண்டாள். அவளது கடைசிக்கடிதத்தில் "அன்புள்ள ஸ்ரீ ராமுவுக்கு, பெண்ணின் காதல் ஆணின்காதலைவிட ஆழ்மானது. நான் பட்டுப்பூச்சியல்ல. கிட்டுவை நான் காதலிக்கவில்லை. கோபுவின் மனதையறிய உங்களிடம் அம்மாதிரி பொய்சொல்லி, உங்களை ஒரு கருவிபோல் உபயோகித்து, எனது முயற்சியில் வெற்றி பெற்றேன். அதற்காக என்னை மன்னிக்கவும்!" என்று அரைகுறையாக வாசகங்கள்காணப்படுகின்றன. போலீஸார் மேலும் புலன் விசாரித்து வருகின்றனர்" இதைப்படித்து முடித்ததும்,நான் பிரக்ஞையற்று விட்டேன்.

"லலிதா! லலிதா!" என்று என் ஆன்மா அலறியது.



கடைசியாக ஒருவர் அந்தச் சிறு பங்களாவில் குடி வந்துவிட்டார்.

சிறுவன் ராமுவிற்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. இந்தப்பங்களா கடந்த ஒரு மாதமாகப் பூட்டப்பட்டே கிடக்கிறது. ராமு தினமும் பள்ளிக்கூடம் செல்லும் பொழுதும் திரும்பி வரும் பொழுதும் இந்தப்பங்களாவின் வாசலைத் தாண்டித் தான் போக வேண்டும். ஒவ்வொரு சமயமும் அப்பங்களாமுன் நின்று அப்பெரிய பித்தளைப் பூட்டைப் பார்த்தவாறு, "ஏன் இதற்குள் ஒருவரும் இன்னும் குடி வரவில்லை?" என்று யோசிப்பான்.

அது ஒரு அருமையான வீடு என்பது அவன் எண்ணம். ஏனென்றால் அவ்வீட்டினுள் ஏழெட்டு அறைகள் இருந்தன. 'கண்ணாமூச்சி' விளையாட இவ்வீட்டைவிட தகுதியான இடம் எது? குளிக்கும்அறைக்குப் பக்கத்தில் ஒரு சிறு அறைஇருக்கிறது அது ஒளிந்து கொள்ள ரொம்ப சௌகரியமான இடம்.



இதற்குமுன் இப்பங்களாவில் குடி வந்தவர்களுடன் அவனைப்போல அநேகக் குழந்தைகள் இருந்தார்கள். அவர்களுடைய தகப்பனார் பாலகோபால நாயக்கர் வீட்டிலேயே இருப்பதில்லை. ஆனாலும் சிறுவர்கள் வீட்டில் விளையாடிக் கொட்டம் அடிப்பதைக் கண்டால் நாயக்கருடைய மனைவிக்கு மாத்திரம் கோபம் வந்துவிடும். ஆனால் ராமுவும், அவனுடன் விளையாடுபவர்களும் அவளைச் சட்டைபண்ணுவதே கிடையாது. ஆண்களிடம் பயப்பட வேண்டிய அளவு பெண்வர்க்கத்தினிடம் பயம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லையல்லவா?

ஒவ்வொரு சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளிலும் ராமு வீட்டை நிர்த்தூளி செய்யும் பையன்களுடன் விளையாடப் போய்விடுவான். யாவரும் மனம் சலிக்க விளையாடுவார்கள். நடு நடுவில் நாயக்கருடைய மனைவி சிடுசிடுத்துக்கொண்டேயிருப்பாள்.

ஒருநாள் ராமுவுக்கும் அவனது தோழர்களுக்கும் ஒரு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. பாலகோபால நாயக்கர் உத்தியோக மாற்றலாகிவேறு ஊர் செல்கிறார் என்ற செய்திதான் அதற்குக் காரணம். பாவம், அவர்களுக்கு மாத்திரம் தெரிந்திருந்தால் பெரியவர்கள் செய்வதுபோல் கூட்டம் கூட்டி நாயக்கர் அந்தப் பங்களாவைவிட்டுச்செல்வது வருந்தத்தக்கது என்று ஒரு அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றி இருப்பார்கள்.

ஆகையால் ஒவ்வொரு சமயமும் அந்தப் பெரிய பித்தளைப் பூட்டைக் காணுந்தோறும் ராமுவிற்கு வேதனை பொறுக்க முடியாததாக ஆகிவிடும். "ஏன் இன்னும் ஒருவர்கூட இவ்வீட்டிற்குக்குடிவரவில்லை?" என்று தன்னைத்தானே

கேட்டுக் கொண்டு மூளையை குழப்பிக் கொள்வான். அவனது சிறு இளம் உள்ளத்தில் இனிமேல் இந்தப் பங்களாவில் நம்மால் விளையாடவே முடியாதோ என்ற ஏக்கம் தோன்றும்.

* * *

அந்தச் சிறுபங்களாவிற்குப் புதிதாக ஒரு குடும்பம் வந்தவுடன் ராமு தன் வீட்டு மாடியிலிருந்துகொண்டு பங்களாவில் ஏதாவது தன்னையொத்த சிறுவர் இருக்கிறார்களா என்று பார்ப்பான். இரண்டு நாட்கள் அவன் கண்ணில் ஒருவரும் படவில்லை. அவனது சிறு கண்கள் பங்களாவின் ஜன்னல்களிலும், தோட்டத்திலும் துருவித் துருவிப்பார்க்கும். பாவம்! அவனுக்கு ஓரே ஏமாற்றமாக இருந்தது.

ஒரு சனிக்கிழமை ராமு பள்ளியிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தான். ஆச்சர்யம்! பங்களாவின் வாயிலில் அவன் வயதையொத்த ஒரு சிறுமி நின்றுகொண்டிருந்தாள் ராமு அவளைக் கூர்ந்து கவனித்தான். சிறு பட்டுக் கவுனை அணிந்திருந்தாள். பட்டுப்பூச்சிகள் பல அவள் உடையில் சித்திரிக்கப்பட்டிருந்தன. காலில் அழகிய செருப்பு ஒன்றையும் போட்டுக் கொண்டிருந்தாள். குட்டையான அவளுடைய பின்னலில் நீல ரிப்பன் சுருக்கிடப்பட்டிருந்தது. ஏன். அதுகூட அவன் கண்களுக்கு ஒரு பட்டுப்பூச்சிபோலவே காணப்பட்டது.



ராமுக்கு அவளைக் கண்டதுமே சந்தோஷம் தாங்க முடியாததாகிவிட்டது. அவள் அருகில் போனால் அவளுடன் என்ன பேசுவது என்று யோசிக்கத் தலைப்பட்டான். இதனால் அவன் நடையும் தளர்ந்தது. அவளுடன் சம்பாஷிப்பதைக் குறித்து சரியான ஒரு காரணத்தைக் கண்டுபிடிக்க அவனால் முடியாததால் எவ்வளவு மெதுவாக நடக்கமுடியுமோ, அவ்வளவு மெதுவாகவே நடந்தான்.

ஆனல்...பாவம்! என்ன ஏமாற்றம் அவனுக்கு! பங்களாவின் சமீபமாகப்போகும் பொழுது, "ராதா...! அடீ, ராதை...!" என்ற குரல் பங்களாவின் உள்ளிருந்து வந்தது. அந்தச் சிறுமியும், "இதோ வந்துட்டேன். அம்மா!" என்று கிளிபோல் கொஞ்சிக் கூவிக்கொண்டு கிளி பறப்பதுபோலவே உள்ளே ஓடிவிட்டாள்.

எப்படியும் ராமு தன் ஏமாற்றத்தைச் சமாளித்துக் கொண்டான். அந்தச் சிறு பங்களாவில் தன்னுடன் விளையாட அழகான ஒரு சிறு பெண் இருக்கிறாள் என்ற நினைவே அவனை ஆனந்தத்தில் ஆழ்த்தியது.

ராமுவின் வீடு பங்களாவிற்கு அடுத்தாற்போல்தான. நேராக வீட்டிற்குச் சென்று தன் தந்தையிடம், "அப்பா! ராதைன்னு ஒரு பேரு இருக்காப்பா?" என்றான். இதுவரையில் அவன் அப்பெயரைக் கேட்டதே இல்லை. பாவம்! அவன் பாட்டி இருந்திருந்தாலாவது புராணத்தில் வரும் ராதையின் கதையைச் சொல்லியிருப்பாள்!

அவனுடைய ஆச்சர்யமான கேள்வியைக்கண்டு அவனுடைய தகப்பனார் சிரித்தார். "ஏன் இல்லாமலென்ன?" என்றார். "இல்லேப்பா! ஏன் கேட்டேனென்றால் பக்கத்து பங்களாவிற்கு யாரோ குடி வந்திருக்கா. அவா வீட்டிலே இருக்கிற பொண்ணு பேரு ராதையாம்" என்றான் சிறுவன்.

"அப்படி என்றால் அவா வீட்டோடு இப்பவே ஐக்கியமாயிட்டேன்னு சொல்லு?" என்று கேட்டு மேலும் சிரித்தார் அவன் தந்தை.

அவனுக்கு வெட்கமாகப் போய்விட்டது. "அதெல்லாம் ஒண்ணுமில்லே, அப்பா! நான் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பறபோது யாரோ அவளை 'ராதை'ன்னு கூப்பிட்டது கேட்டது. ஒரு பெண்ணுக்குத்தானே, அப்பா, ராதைன்னு பேரு வைப்பா?" என்றான் ராமு

"ஆமாம், ஆமாம். சும்மா 'தொண தொணன்னு பேசாதே, போ!" என்று கூறி படிப்பில் ஆழ்ந்தார் அவன் தகப்பனார்.

* * * *

மேலும் இரண்டு நாட்கள் கழிந்தன. இவ்விரண்டு நாட்களிலும் ராமுவின் மனம் ராதையின் வீட்டிற்குள் எப்படிப் போவது என்பதைப்பற்றியே யோசித்துக் கொண்டிருந்தது. சரியான காரணம் ஒன்றும் அவனுக்கு உதிக்கவில்லை. கடைசியாக அவனது சிறு பச்சை உள்ளத்தை அலட்டிக்கொண்டதன் விளைவாக நல்ல ஒரு சாக்கு கிடைத்தது. நிசப்தமான நள்ளிரவில், தன்னை ஒருவரும் கவனிக்கவில்லை என்பதை நிச்சயித்துக்கொண்டு, காற்றாடி ஒன்றையெடுத்து அதனுடன் சிறு கல் ஒன்றையும் சேர்த்து பக்கத்து பங்களாவின் தோட்டத்தில் வீசிவிட்டான். அவன் எண்ணப்படி பாதி வேலை முடிந்துவிட்டதாக மனம் பூரித்து நன்றாக உறங்கச் சென்றான். அவன் இளம் நெஞ்சம், உழுது விதை விதைத்து, பயிர் செய்து, நாற்று நட்டு அறுவடைக்காகக் காத்திருக்கும் குடியானவனைப்போல் தவித்துக் கொண்டிருந்தது.

காலையில் வெகு சீக்கிரமாகவே எழுந்தவன் பங்களாவிற்குச் சென்றான். வாயிற் புறத்து காம்பவுண்டு கதவை திறந்து கொண்டு பங்களாவினுள் நுழைந்தான். ஆனால் பங்களாவின் கதவு அடைத்திருப்பதைக் கண்டு அவன் மனம் வாட்டமுற்றது.

அச்சமயம் அவனுக்கு கதவைத் தட்டுவது அவ்வளவு புத்திசாலித் தனமாகப் படவில்லை. அதுவும் கதவைத் தட்டி யாரைக் கூப்பிடுவது? 'ராதை' என்ற ஒரு பெயர் தான் அவனுக்குத் தெரியும். ஆனால் முன்பின் பழக்கமில்லாமல் அவளையும் எப்படி அழைப்பது? அவனுடைய மனம் இவ்விதமான சிந்தனைகளில் சிறிது நேரம் ஆழ்ந்திருந்தது. தான் போட்ட திட்டப்படி நடக்கவில்லையே என்ற வருத்தம் அவனைச் சூழ்ந்துகொண்டது.

ஆனால் அப்பொழுது பங்களாவினுள்ளிருந்து யாரோ வாயிற் பக்கம் நடந்து வரும் ஓசை கேட்டது. யாராவது இப்பொழுது கட்டாயம் கதவைத் திறப்பார்கள் என்று நினைத்தான். நின்ற இடத்திலிருந்தே வெகு ஆவலுடன் கதவைநோக்கியபடி இருந்தான். அடுத்த வினாடி கதவு திறக்கப்பட்டது. ஆனால் கதவைத் திறந்தது ராதையல்ல!

அவனெதிரே அவன் தகப்பனார் வயதையொத்தவர் ஒருவர் நின்றுகொண்டிருந்தார்.



ஞாபகப்படுத்துகிறோம்

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.

ராமு அவரை உற்றுக் கவனித்தான். அவருடைய தன்மையை ஊகிக்க முயன்றான்.

அவர் சிவப்பாக, நன்றாக இருந்தார். ஏறக்குறைய அவனுடைய அப்பாவின் வயது தான் இருக்கும். ஆனால் இவருக்கு முன்தலை வழுக்கையாக இருந்தது. சாதாரணமாக அவர் திடகாத்திரம் உள்ளவராக நீலக்கோடுகள் போட்ட பைஜமா அணிந்துகொண்டு அதேமாதிரி சட்டையுடன் காணப்பட்டார். ராமு அவரை அதிசய நோக்குடன் பார்த்தான். இம்மாதிரி இரவு உடை அணிந்திருப்பவர்களை அவன் கண்டதேயில்லை.

அவர் தன்னைப் பார்த்துச் சிரிப்பதாக ராமுவிற்குப்பட்டது. உடனேயே, "என் காற்றாடி உங்க வீட்டுத் தோட்டத்திலே விழுந்திட்டது மாமா! அதை தேடி எடுத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டான் தைரியமாக.

(தொடரும்)

மன்னனை ஆண்ட மங்கை

8

குறிகாரி

'யார் அந்தக் குறத்தி? அகஸ்திய மலைப்பக்கத்தில், எதிர்காலத்தை அறிந்து சொல்லக்கூடிய குறத்திகள் உண்டென்று கேள்விப்பட்டிருக்கிறோமே! அந்த மாத்திரைக்கோலைக் கொண்டு திரையை அப்படியே விலக்கி வருங்காலத்தைப் பார்த்துவிடுகிறார்களா அந்தக் குறத்திகள்? அந்தப் பாசிமணிகளும் குன்றிமணிகளும்தான் அதோவருகிறாளே அவளுக்கு எவ்வளவு களையாயிருக்கின்றன! அந்தத் திலகமும் திருநீறும் அவளுடைய நெற்றிக்கு எவ்வளவு பொருத்தமாயிருக்கின்றன! இதோ வந்துவிட்டாள். என்ன, மின்வெட்டுப்போல முகவெட்டு! பேச்சுக்கொடுத்துப் பார்க்கலாம்' என்று நினைத்தாள் ஹரிலட்சுமி.

அப்போதுதான் தன் பிறந்த ஊரான திருக்கோஷ்டியூருக்குப் போய்விட்டுத் திரும்பி வந்திருந்தாள். பாண்டியமன்னர் ஒரு பெரிய வித்வத்ஸபை கூட்டப்போகிறார் என்று அந்த ஊரெல்லாம் ஒரே ஓசை. அச்சபையில் பண்டிதர்களும், மதவாதியர்களும் கூடி விவகரிப்பார்களென்றும், மிகச்சிறந்தபண்டிதர்களைப்பல்லக்கு அனுப்பி வரவழைத்து விசேஷமாய்ச் சம்மானிக்கப்போகிறார் மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தியென்றும், ஹரிலட்சுமி திருக்கோஷ்டியூரில் கேள்விப்பட்டிருந்தாள். தான் திரும்பியதும் வழியெல்லாம் அதே பிரஸ்தாபம்தான்.

இவளுடைய கணவர் ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோயிலில் அர்ச்சகர்; வேதாகம சாஸ்திரத்தைக் குடித்து ஏப்பமிட்டவர். தர்க்கமென்றால் ததியோதனம், புளியோதனம் பட்டபாடுதான்! ஆகவே, ஹரிலட்சுமி ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் திரும்பி வந்ததும், பாண்டிய மன்னனிடமிருந்து தூதனும் தங்கப்பல்லக்கும் வந்திருப்பது கேட்டு தனலட்சுமி தன் வீடுதேடி வந்துவிட்டதாகவே மகிழ்ச்சியடைந்தாள். தன்னுடைய கணவரான ஞானப்பிரானுக்கே அரசர் பிரான் அந்த விசேஷ மரியாதைகளை அனுப்பியிருப்பதாக எண்ணம்.

பக்தமணியான விஷ்ணுசித்தருக்கு அந்த மரியாதைகள் வந்திருக்கக்கூடுமோ?' என்று இவள் கவலைப்படவில்லை. விஷ்ணுசித்தர் வேத வேதாந்தப் பயிற்சிகளையும், ஆகமப்பயிற்சிகளையும் விட்டுப் பல்லாண்டுகள் கழிந்துவிட்டன என்பது அவளுக்குத் தெரியும். அவர் ஒரு பாகவதர், பரம பாகவதர், ஆனால் பண்டிதரா? வித்வத்ஸபையில் தர்க்க விவகாரங்கள் நடக்கும்போது பக்தியும் பஜனையும் எப்படி உபயோகமாகும்? நந்தவனப் பணியிலேதான் சாஸ்திர விவகாரங்களையெல்லாம் மறந்துவிட்டாரே! ஏடும் எழுத்தாணியும் துறந்தகை மண்வெட்டிபிடித்ததே! அவருக்கு இப்போது தெரிந்ததெல்லாம் நந்தவனக் கைத்தொழில் தானே? வித்வத்ஸபையில் வெற்றி பெறுவதற்குக் கைத்தொழில் உதவுமா? பண்டிதர்களின் வாய்த்தொழில் அல்லவா தர்க்கரீதியாக வெற்றியளிக்கக்கூடியது? அதற்குத் தன் கணவரைக்

காட்டிலும் தகுதியானவர் இருக்க முடியுமா?

எத்தனையோ தர்க்க—குதர்க்க—வாத—விதண்டாவாத விவகாரங்களில் எத்தனையோ பண்டிதர்களைச் சாடி ஓடோடவிட்டு முதுகு கண்டு மூர்க்கச் சிரிப்புச் சிரித்தவர். இவரோடு விவகாரம் செய்வதற்கு வைதிக பண்டிதர்களும் வாயிழந்து போவார்கள்; புறச் சமயிகளான ஜைன பௌத்த பண்டிதர்களும் மூளை குழம்பிப் போவார்கள். பௌத்த பண்டிதர்களின் தலைவரான ஆனந்த தீர்த்தருக்கும் ஞானப்பிரான் என்றால், உள்ளுக்குள்ளே பயம்தான். அதனால்தானே சிநேகம் செய்துகொண்டார். இவ்வளவும் இந்த அம்மாளுக்குத் தெரியும்.

அப்பேர்ப்பட்ட தர்க்கஞானி விவகாரத்தில் ஒரே ஒரு ஆசாமியிடம் தான் தோல்வி அடைவது வழக்கம். அது வேறு யாராகத்தான் இருக்கமுடியும்? ஸ்ரீமதி ஹரிலட்சுமியம்மாளின் வாசாலகத்திற்கு முன்புதான் ஞானப்பிரானும் பணிந்துபோவார். ஆனால் அது வேறு விஷயம். சாஸ்திர ஞானமில்லாத சப்த ஜாலங்களையே கொண்டு அடையும் வெற்றிதான் இந்த அம்மாளின் வெற்றி. சாஸ்திரஞானத்தை இஷ்டப்படியெல்லாம் ஏவிக்கூவிப் பணிகொள்ளும் சப்தஜாலங்களின் வெற்றி ஐயாவின் வெற்றி!

'வித்வத்ஸபையில் சாஸ்திர ஞானிகளுக்குத் தானே இடம்? என்னைப்போல் வேதசாஸ்திர ஞானம் மறுக்கப்பட்டவர்களுக்கும், விஷ்ணு சித்தரைப்போல் வேத சாஸ்திரங்களை மறந்துவிட்டவர்களுக்கும், பாண்டிய ராஜ சக்கிரவர்த்தியின் பாண்டித மகாசபையில் இடம் ஏது? ஆதலால் என் கணவருக்குத்தான் இந்தப் பல்லக்கும் அழைப்பும் வந்திருக்கவேணும் என்று தீர்மானித்தாள் ஹரிலட்சுமி.

இப்படியெல்லாம் எண்ணமிட்டுக்கொண்டிருக்கும் போது தான் வீதியில் குறத்தி

கூடையும் மாத்திரைக் கோலுமாய்க் குலுக்கிப் பகட்டி நடந்து வருவதைக் கண்டாள். அவளிடம் குறிகேட்டுத் தன் மனத்திலுள்ள நம்பிக்கையை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணித்தான் அவள் வருகையை எதிர் நோக்கி நின்றாள்.

அந்தக் குறத்தியும் ஹரிலட்சுமிக்கு எதிரே வந்துநின்றாள். அந்த மாத்திரைக்கோலை அவள் வலது கையில் பிடித்திருந்த மாதிரியே ஹரிலட்சுமியை வசீகரித்துவிட்டது. மலைக்குறத்தி மாத்திரைக்கோல் பிடித்திருப்பதுபோலவா தோன்றுகிறது? ஒரு ராணி செங்கோல் பிடித்திருப்பதுபோல் அல்லவா இருக்கிறது?' என்று நினைத்துக்கொண்டே அவளை நோக்கி, 'நீ எங்கேயிருந்து வருகிறாய்? அகஸ்திய மலையா? இமய மலையா? மேருவா?' என்று கேட்டாள்.

'எனக்கு ஒரே இருப்பிடம்தானா? இடது கை பார்த்தேன். கைப்பலனாகவே வருங் குறியைக் காட்டிவிட்டேன்.' அம்மா மலைகளெல்லாம் உறவுதான்—உறைவிடம்தான். இமய மலை தமையன்மலை; விந்தைமலை தந்தை மலை; தங்கைமலை தங்கமலை; சாமிமலை மாமிமலை; நாடுகளெல்லாம் என் சஞ்சார பூமிதான். அங்க, வங்க, கலிங்கம், சிந்து, காஷ்மீரம், சீனம், சாவகம் முதலான எத்தனையோ நாடுகளில் எல்லாம் திரிந்து குறி சொல்லியிருக்கிறேன். ஐராவதி, நீலநதி தீரங்களிலும் வருங்காலத் திரையைக் கிழித்து வரப்போகிறதையெல்லாம் அப்படி அப்படியே காட்டியிருக்கிறேன். சேரமன்னனுக்குத் தோல்விக்குறி சொன்னேன்; பாண்டிய சக்கிரவர்த்திக்கு வெற்றிக் குறி காட்டினேன்!' என்றெல்லாம் குறத்தி ஒரே பிரசங்க மாரியாகப் பொழிந்தாள்.

பாண்டிய சக்கிரவர்த்தி சேர நாட்டில் படை கொண்டு போய் வெற்றி பெற்ற செய்தி எங்கும் பிரசித்தமாக இருந்ததால், அவ்வளவு பெரிய வெற்றியை முன் கூட்டியே கண்டுபிடித்துச் சொல்லி

விட்ட குறத்திமீது ஹரிலட்சுமிக்குப் பெரு நம்பிக்கை பிறந்துவிட்டது.

'எப்படிப் பார்த்துச் சொல்லிவிட்டாய்! அடி, பெண்ணே!'

'பாண்டிய மன்னருக்கு வலதுகை பார்த்தேன்; மகாராணி பூசுந்தரி தேவிக்கு இடது கை பார்த்தேன். கைப்பலனுகவே வருங் குறி காட்டிவிட்டேன்.

'உன் பெயரென்ன?'

'குறவஞ்சி மதுரவள்ளி.'

'மதுரமா நீ? உன் பேச்சும் மதுரமாயிருக்கிறது. பெயரும் மதுரமாயிருக்கிறது!'

'குறியும் மதுரமாகவே இருக்கும், அம்மே!'

அப்படியானல் என் கை பார்த்துக் குறி சொல்லுகிருயா?'

'கைக்குறி மட்டுமா? அம்மே! அம்மே! உன் விழிக்குறி மொழிக்குறி மெய்க் குறி மனக்குறி எதையும் சொல்லி விடுவேன். பசியாய் இருக்கிறது; கூழ் கொண்டு வா, அம்மே! காகம் இடம் போகிறது. அதோ பல்லி வெற்றி சொல்லுகிறது. அம்மே! உன் மாப்பிள்ளைக்கு யோகம் வருகிறது.'

ஹரிலட்சுமி திகைத்துப் போனுள். 'இந்தக் குறத்தி எப்படி என் மனத்திலுள்ளதைக் கண்டு பிடித்துச் சொல்லி விட்டாள்? இன்னும் விவரமாய்க் கேட்டுத் தெரிந்து கொள்ள வேணும்' என்று எண்ணியவளாய்க் குறத்தியை நோக்கி, மதுரம்! என் கை பாராமலே குறி சொல்லுகிருயே; இனிமேல் கையைப் பார்த்து விவரமாய்ச் சொல்லு' என்று கேட்டாள்.

'அப்படியானல் இங்கே தரை மெழுகு'

'இதோ மெழுகிவிட்டேன்.'

'கோலம் போடு.'

'இதோ கோலமும் அவசரமாய்ப் போட்டுவிட்டேன்.

'கணபதி பிடித்துவை.'

ஹரிலட்சுமி ஒரு கணம் திகைத்து நின்ருள்.

'கணபதியா? நாங்கள் வைஷ்ணவர்களல்லவா?'

'குறி சொல்லவேணுமானுல் கணபதி வந்துதானு வேண்டும்! இல்லாவிட்டால், அவர் விக்கினேசுவரர்; விக்கினங்களை உண்டு பண்ணிக் குறி தவறும்படி செய்து விடுவார்!'

'அப்படியானல் இதோ பிள்ளையார் பிடித்து வைக்கிறேன்' என்று ஒரு பிள்ளையார் வைத்து ஹரிலட்சுமி அந்தப் பிள்ளையாருக்கு நெற்றியில் நாமம் இட்டு வைத்தாள்.

மதுரவள்ளி சிரித்துக்கொண்டே, 'பாதகமில்லை; இந்தச் சிவகுமாரர் பெருமாளுக்கும் அருமை மருமகன் தானே; மாமனுக்குப் பெண் இருந்தால் அந்த முறைப்பெண்ணை மணந்து மாப்பிள்ளையாகவும் இருந்திருப்பார்; பெண்ணுக்காக நாமம்போட்டு வைஷ்ணவ வேடமும் போடக்கூடியவர்தான்! பொல்லாத பிள்ளையார், இல்லாததைச் சொல்லமாட்டார்!' என்ருள்.

பிறகு, 'பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்து வை; மூப்பழம் படைத்து வை; எள்ளு சர்க்கரை கொண்டு வை; நிறைநாழி அளந்து வை' என்றெல்லாம் ஹரிலட்சுக்குக் குறமதுரம் கட்டளைகள் போட்டுப் போட்டு வேலை வாங்கி விட்டாள்.

அப்பால் மதுரம் ஹரிலட்சுமியை நோக்கி, 'பிள்ளையாருக்கு எதிரே வந்து கும்பிடவேணும்' என்ருள். பட்டாசாரியரின் பத்தினியாகிய தான் கணபதியைக் கும்பிடுவதை யாராவது பார்த்துவிட்டால், பரிகசிப்பார்களோ? ஆகவே ஹரிலட்சுமி அக்கம் பக்கம் பார்த்துவிட்டு ஒரு வருமில்லையென்று தைரியமாக ஒரு கும்பிடு போட்டாள், யானை முகக்கடவுளுக்கு. மதுரவள்ளி ஹரிலட்சுமியை நோக்கி, 'அம்மே! தங்கராஜாத்தி! உன் தங்கக் கையைக் காட்டு; அந்த இடது கையைக் காட்டு' என்று கொஞ்சி, ஹரிலட்சுமியின் இடது கையைப் பிடித்துப் பார்க்கத் தொடங்கினுள்.

'ஐயையோ!' என்று கதறினுள் ஹரிலட்சுமி.

'என்ன ஆபத்து வந்துவிட்டதம்மா உனக்கு? நான் உன்னைக் கொல்லப் போகிறேனு? பயமாயிருக்கிறதா?' என்று கேட்டாள் குறமதுரம்.

'ஐயோ! தீட்டுப்படுத்திவிட்டாயே' என்று அலறினுள் ஹரிலட்சுமி.

'கையைப் பிடித்துப் பார்த்தால்தான் கைக்குறி உள்ளபடி பிடிபடும்!' என்று மதுரவள்ளி சொன்னதும், 'பிறகு முளித்துக்கொள்ளலாம்' என்ற எண்ணத்துடன் ஹரிலட்சுமி பொறுமையாகக் கையை நீட்டிக்கொண்டிருந்தாள்.

'நடுவில் தும்மிவிடாதே; தும்மல் வந்தால் ஒற்றைத் தும்மலாக நிறுத்திவிடாதே; ரெட்டைத் தும்மலாகப் போடு! அது என் குறிக்கு நல்ல நிமித்தமாகும்' என்று எச்சரித்துவிட்டுக் குறமதுரவள்ளி ஹரிலட்சுமியின் கைபார்த்துக் குறி சொல்லத் தொடங்கினுள்.

'இந்தக்கை உள்ளபடியே தங்கக்கை; தொட்டதைத் தங்கமாக்கும் கை; நவதானியங்களையும் நவநிதிகளாக விளைக்கும் கை; கூழையும் பாலாகக் காய்ச்சியிடும் கை' என்று மதுர

வள்ளி அடுக்கிக்கொண்டே போனாள். இப்படியெல்லாம் முகஸ்துதி—இல்லை, கைஸ்துதி—சொல்லிவிட்டு ஹரிலட்சுமியின் முகத்தை நோக்கி, 'இந்தக் கையைப் பிடித்தவர் பாக்கியசாலி; எட்டுத்திக்கும் விஜயம் செய்யக்கூடிய பண்டித ராஜா. மகராஜி! இது கைக் குறி. மெய்க்குறி. இக்குறி பொய்யாது' என்றாள்.

ஹரிலட்சுமியின் முகம் மலர்ச்சி பெற்றது. 'திக்விஜயம் செய்யும் பண்டிதராஜா' என்று குறத்தி சொன்னது, பாண்டிய ராஜாவின் வித்வத் ஸபையையும், அங்கே தமது கணவரை எதிர் நோக்கியிருக்கும் விசேஷ சம்மானங்களையும் ஹரிலட்சுமிக்கு நினைப்பூட்டியது. அம்முகக் குறியைக் கவனித்த மதுரவள்ளி மேலும் குறி சொல்லத் தன் இஷ்ட தெய்வங்களின் பெயர்களையெல்லாம் கூவியழைத்தாள்.

'விநாயகா!' என்று கூப்பிட்டாள்; உரக்கக் கூப்பிட்டாள், எதிரேயிருந்த அம்மூர்த்தியின் காதிலே தன் குரல் மோதும்படி. 'முருகா! திருமால் மருகா!' என்று கூச்சலிட்டாள், தூரத்திலிருந்தாலும் அவர் மயிலேறி ஓடி வரும்படி. 'பைரவா! வீரபத்திரா' என்று கத்தினாள். அந்தக் கோப தெய்வங்களும் குணமாக வந்து குறி சொல்லும்படி. 'கறுப்பா! பன்றி மாடா! பாவாடைராயா!' என்று கூவிச் சில்லரைத் தெய்வங்களையும் சேட்டை செய்யாமலிருக்கும்படி கேட்டுக்கொண்டாள்.

மதுரவள்ளி பெண் குலத் தெய்வங்களையும் புறக்கணிக்கவில்லை. 'தேவியே! என் ஆவியே! மூவர் தலைவியே!' என்று ஜகன்மாதாவைப் பொதுவாக வேண்டினாள். 'கலைமகளே! மலைமகளே! அலைமகளே!' என்று மும்மூர்த்திகளின் தேவிமார்களையும் வேண்டிக் கொண்டாள். 'காளீ! துர்க்கா! பிடாரீ!' என்று தேவியின் பயங்கர சொரூபங்களுக்கும் பிரார்த்தனை செலுத்தினாள்.

'இந்தக் குறிக்கு இத்தனை தெய்வங்களும் துணை செய்ய வேண்டுமா?' என்று ஹரிலட்சுமி அதிசயித்தாள். 'பரதேவதையான பகவான் ஒருவனைத்தான் வழிபடவேணும்' என்பது ஹரிலட்சுமி பிறந்த மதத்தின் கொள்கை. 'எனினும் முழுமுதற் கடவுள் முத்திதானே கொடுக்கும்? குறத்தியிடம் வந்து குறி சொல்லுமா? அதற்காவது சிறு தெய்வதகளும் அவசியம்தான்!' என்று எண்ணிக்கொண்டே, 'இக்குறத்தியின் நீளமான தெய்வ வழிபாடு முடிந்து குறியின் விவரம் எப்போது ஆரம்பமாகும்?' என்று துடித்துக்கொண்டிருந்தாள்.

மதுரவள்ளி ஒருவிதமாகத் தன் நீண்ட வழிபாட்டை முடித்துக்கொண்டு அத்தெய்வங்களை நோக்கி, 'சொல்லுங்கள் தேவதைகளே! இந்த ஹரிலட்சுமிப் பெண் உள்ளத்தில் வைத்து உருகிப்போகிறாளே, அது என்னவென்று சொல்லிவிடுங்கள். இவளுக்கு வேண்டியது என்ன? பாலோ, சோறோ? பட்டோ, பவளமோ? நகையோ, நாணயமோ? வைரமோ தைரியமோ? ஒளியாமல் சொல்லிவிடுங்கள்—ஓ, தெய்வங்களே!' என்று வேண்டினாள்.

'இவள் திரவியத்தைப் பறிகொடுத்தாளா? இவளை நோக்கித் திரவியங்கள் வந்துகொண்டிருக்கின்றனவா?' என்று எதிரே

கண்ணுக்குத் தெரியாமல் நிற்கும் யாரையோ கேட்பதுபோல் கேள்விகள் கேட்டாள்.

திடீரென்று மதுரவள்ளியின் முகமும் கண்களும் வெறிகொண்டனபோலத் தோன்றின. உதடுகள் துடித்தன. 'நாக்கும் துடிக்கிறதம்மா! இடிக்கிறது குறளி உள்ளுக்குள்ளே, உலக்கைபோட்டு நெல்லை இடிப்பதுபோலே! இதோ சொல்லிவிடுகிறேன். "சொல்லு, சொல்லு" என்று என் பிராணனை வாங்குகிறாயே! இதோ சொல்லுகிறேன்' என்றாள் மதுரவள்ளி.

பிறகு மதுரவள்ளி ஹரிலட்சுமியை நோக்கி, 'முத்தே! மோகனமே! குறி சொல்கிறேன். மானே! தேனே! பாலே! இதோ சொல்லிவிடுகிறேன். மயிலே! குயிலே! கிளியே! பூவையே! பூவாத பூவே! இதோ இப்போதே சொல்லுகிறேன் கேள்' என்றாள்.

உடனே ஹரிலட்சுமி, 'குழப்பாமல் சொல்லிவிடடீ, நாடகக்காரி!' என்று பதறிக்கொண்டே வேண்டிக்கொண்டாள்.

அது கேட்ட மதுரவள்ளி, 'ராஜ சம்மானங்களுடன் விரைவில் வந்து சேருவார் உன் கணவர்' என்று சொல்லிவிட்டாள். பிறகு 'இது நான் சொல்லும் வார்த்தை இல்லை; குறளி சொல்லும் குறி; தப்பாது, தப்பாது!' என்றாள்.

ஹரிலட்சுமி உடம்பெல்லாம் காதாகக் கேட்டாள் அந்தக் குறியை. கேட்டுவிட்டு, 'அடபைத்தியமே! வித்வத் ஸபை கூடிய பிறகல்லவா ராஜ சம்மானம் கிடைக்கும்? ஏனிப்படிக் குறியைக் குழப்பி உழப்பிப் போட்டாய்? கண்ணைச் சிமிட்டிப் பகட்டி உருட்டிப் புரட்டி மயக்காதே. உண்மை சொல்லடி, குறக்கள்ளி!' என்றாள்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே, பாண்டிய ராஜதூதன் அவ்வழியாகத் தன் குதிரையை நடத்திக்கொண்டு வந்தான். அவனைக் கண்டதும் ஹரிலட்சுமி ஆத்திரமாக ஓடிப்போய், 'பாண்டிய சக்கிரவர்த்தியின் தங்கப் பல்லக்கு இங்கேதானே வந்திருக்கவேணும்? நான் இப்போதுதான் என் பிறந்த ஊரிலிருந்து வந்தேன். அவர் வெளியே போயிருப்பதாகத் தெரிகிறது; தாங்கள் கொஞ்சநேரம் காத்திருந்தால் வந்துவிடுவார்' என்று மடமட வெனப் பேசினாள்.

அந்தராஜதூதன், 'இப்படியும் ஒரு ஜன்மமா?' என்று நினைத்ததுபோல் அவளை ஒரு பார்வை பார்த்தான். பிறகு அருகேயிருந்த குறத்தியை நோக்கியதும் திகைத்துப்போய்க் குதிரைமீது ஒரு குதிகுதித்து ஏறிக்கொண்டு போய்விட்டான். போகும்போதே, 'பல்லக்கும் சன்மானங்களும் விஷ்ணுசித்தருக்கு வந்திருக்கின்றன' என்று அவன் சொன்ன வார்த்தை, இருவர் காதிலும் தெளிவாக விழுந்தது. ஹரிலட்சுமி திடுக்கிட்டாள்.

மதுரவள்ளி அந்த வார்த்தையைக் கேட்டுத் திடுக்கிடாவிட்டாலும், ஆளின் முகத்தைப் பார்த்துத் திகைத்துப்போனாள். 'என்ன அதிசயம் நாங்கள் அவரை ஏமாற்றி விட்டதாக நினைத்தோம்; அவரும் எங்களை ஏமாற்றி விட்டாரே!' என்று ஒரு கணம் திகைத்து நின்று, ஹரிலட்சுமி கோபத்துடன் தன்னை நோக்குவதை அறிந்து, தன் முகக்குறியை வசீகரமான ஒரு புன்னகையாக்கிக் கொண்டாள். இந்த முகத்தை இப்போது ஹரிலட்சுமி பார்த்ததும், கள்ளங்கபடற்ற ஏதோ ஒரு குழந்தை முகம் போலத் தோன்றியது.

எனினும் ஹரிலட்சுமி, 'ஏமாற்றி விட்டாளே குறத்தி' என்ற கோபத்துடன், என்ன வாய்மதம் உனக்கு? ராஜ சம்மானங்களும் திக்விஜயமும் என் பண்டிதக் கணவருக்குத்தான் என்றாய், நீ அப்படிப் பொய் சொல்லி வாய்மூடு முன்பே ராஜதூதன், "பரிசுகளெல்லாம் பண்டிதருக்கல்ல: பாமர விஷ்ணு சித்தருக்குத் தான்!" என்று சொல்லிப் போய் விட்டான். ஏண்டி பொய் சொன்னாய்?' என்று கர்ஜித்தாள்.

'காளீ! துர்க்கா! பிடாரீ!' என்று கத்தினாளே குறத்தி, அந்த ஸ்வரூபங்களில் ஒன்று பிரத்தியட்சமாகி விட்டது போலத் தோன்றியது ஹரிலட்சுமியை அப்போது பார்த்த மதுரவள்ளிக்கு.

எனக்குப் பொய்யே சொல்லத் தெரியாது, அம்மே! நான் பொய் சொன்னாலும் காளிபொய் சொல்லுமா? குறளிக்குப் பொய் சொல்லத் தெரியுமா? என்று தோலா வழக்காய்ப் பேசினாள்.

'அப்படியானால், ராஜ தூதன் பொய் சொல்லுகிறானா?'

'இந்தக் காலத்தில் ராஜ சன்னியாசிகளும் பொய் சொல்கிறார்களே! திருக்கோஷ்டியூரில் உன்னிடம் துறவியான ஆனந்த தீர்த்தர் வந்து பொய் சொல்லவில்லையா? பொய்யென்று இப்போது உனக்குத் தெரியாமலிருக்கலாம். எனினும் நீ, அவர் சொன்னது பொய்யென்று இனிமேல் தெரிந்து கொள்வாய். உன் கணவரிடத்திலும் அந்த ராஜசன்னியாசி கூசாது பொய் சொல்லி வருகிறாரே! இப்படிப் பொய்கள் நிறைந்த உலகத்தில் நானும் என் குறளியும் தான் நிஜம் சொல்லக்கூடியவர்கள்!' என்று மதுரவள்ளி சொல்லிவிட்டு, வீதியிலே சுட்டிக் காட்டினாள். அந்தக் குறி ஹரிலட்சுமிக்கு மீண்டும் நம்பிக்கை உண்டாக்கியது.

ஹரிலட்சுமி அரைக்குருடு. அவளுக்கு விசேஷமாக ஒன்றும் தெரியவில்லை; யாரோ மனிதனோ, குரங்கோ தூரத்தில் வருவது போலத்தான் தெரிந்தது. அப்போது மதுரவள்ளி ஹரிலட்சுமியின் கையைப் பிடித்து ஒரு பக்கமாயிழுத்து, 'இதோ ராஜசம்மானங்களோடு பண்டிதராஜா வந்துவிடுவார், தன்னுடைய ராணியிடம்! குறவள்ளி, எங்கள் குலக்கொடி, குலதெய்வம் பொய் சொல்ல மாட்டாள். நான் அதோ அந்த அறையில் மறைவாக இருக்கிறேன். சம்மானங்கள் உன்னை நோக்கி வத்துகொண்டிருக்கின்றன, வந்து விட்டன!' என்று சொல்லிவிட்டு அந்த அறைக்குள் போய்விட்டாள்.

'என்ன சாகஸக்காரி இவள்!' என்று எண்ணி, இன்னது செய்வதென்று தோன்றாமல் ஹரிலட்சுமி திகைத்து நிற்கும்போதே, 'அடியே! அடியே!' என்று மூச்சுத் திணறும் குரலில் ஓர் அழைப்பு இவள் காதில்விழுந்தது. ஆம், பட்டாசாரிய சுவாமிகள் எழுந்தருளிவிட்டார், சுமக்க மாட்டாமல் ஒரு பெருஞ் சுமையைச் சுமந்து கொண்டு.

'அடியாவது, நுனியாவது!' என்று முணுமுணுத்துக்கொண்டே ஹரிலட்சுமி, 'பிராமணர் யாரிடத்திலோ காய்கறி அரிசி பருப்பு இவற்றைத் தானம் வாங்கி வருகிறார்' என்று நினைத்தாள். பண்டித பட்டாசாரிய ஞானப்பிரான்சுவாமி அவசரமாக அந்தப் பெரிய மூட்டையை அவள் முன் இறக்கிவைத்தார். பகவானுக்கு முன் பிறர் கொடுக்கும் காணிக்கைகளைக் கூட அவ்வளவு பயபக்தியுடன் சமர்ப்பித்திருக்க மாட்டார்!

அலட்சியமாக அம்மாள் மூட்டையை அவிழ்த்துப் பார்த்தாள்.பார்த்ததும் அலட்சியம் பறந்துவிட்டது. திகைத்துத் திக்பிரமை கொண்டது போல் நின்றுவிட்டாள் ஒரு கணம். 'இவ்வளவு பொன்னும்மணியும்யாருக்கு? தரித்திரதேவியின் ஆசைப் புதல்வரான என் பட்டாசாரியருக்கா? ஓஹோ, குறத்தியின் குறளியும் பொய் சொல்லவில்லை; பலித்துவிட்டது! ராஜ சம்மானங்களும்

பல்லக்கும் நமக்குத்தான். இனி ராஜகுரு நமது பண்டிதக் கணவர்தான்;—காரியத்தில் நாம் தானே!' என்றெல்லாம் அலை பாய்ந்த எண்ணங்களை ஒருவாறு நிதானப்படுத்த முயன்றாள்.

அதற்குள் பண்டித ஞானப்பிரானும் நிதானமாக மூச்சுவிடத் தொடங்கினார். லட்சுமி அவரை நோக்கி ஒரே குதூகலமாய் "மகாராஜா இத்தனை சம்மானங்களையும் இப்போதே அனுப்பிவிட்டாரா? இன்னும் எத்தனை சம்மானங்கள் ராஜ சபையில் கிடைக்குமோ? நம் கலி தீர்ந்தது; வடபத்திரசாயி வரப்பிரசாதங்களை இப்படிக் கொடுத்துவிட்டாரே! எல்லாம் என் பாக்கியம்தான், என் அதிருஷ்டம்தான்! உங்கள் ஜாதகம்தான் ஒரே தரித்திர யோகமாச்சே!' என்று மூச்சுவிடாமல் முழக்கினாள்.

பட்டாசாரியர் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஹரிலட்சுமி மறுபடியும் அவரை நோக்கி, 'அந்த முட்டாள்-ராஜதூதன் முழுப் பொய் சொல்லிவிட்டானே? அரசர்பிரான் இத்தனை சம்மானங்களையும் நமக்கு அனுப்பியிருக்க, தோட்டக்கார விஷ்ணுசித்தருக்குப் பல்லக்கும் பரிசுகளும் வந்திருப்பதாக ஆகாயப் புழுகு புழுகிவிட்டானே!' என்றாள்.

அப்போது பக்கத்து அறையிலிருந்து சிரிப்பை அடக்கிக்கொள்வது போன்ற சத்தம் கேட்டது. 'அந்தக் குறத்தியும் தன் குறி பலித்துவிட்டதென்று சந்தோஷப்படுகிறாள்; தானிருப்பது பட்டாசாரியருக்குத் தெரியக்கூடாதென்று மகிழ்ச்சியை அடக்கிக்கொண்டாள். அவர் அதைக் கவனிக்கக்கூடாதுதான். ஞானபண்டித சிரேஷ்டரின் தேவி குறத்தியுடன் சகவாசம் செய்யலாமா? சிறு தெய்வங்களை முன்னிட்டுக் குறி கேட்கலாமா?' என்று மின்னல்-வேகத்தில் எண்ணங்கள் பாய்ந்தன, பறந்தன ஹரிலட்சுமியின் சித்தாகாசத்திலே.

ஹரிலட்சுமி கணவரை நோக்கி, 'மன்னர் புத்திசாலிதான்; ஆனால் அந்த ராஜதூதன் மடையன்! ராஜா புத்திசாலியாக இல்லாவிட்டால், உங்களைத் தேர்ந்தெடுத்துக் கௌரவித்திருப்பாரா?' என்றாள். பட்டாசாரியரோ அசடு வழிய விழித்துக்கொண்டே, 'அரசர் விஷ்ணுசித்தரைத்தான் அழைத்திருக்கிறார். அவருக்கு வந்த பரிசுகளே இவை! இவற்றையெல்லாம் விஷ்ணுசித்தர் எனக்குக் கொடுத்துவிட்டார்' என்று பதில் சொன்னார்.

ஹரிலட்சுமி திகைத்துத் திடுக்கிட்டுத் திக்பிரமை பிடித்தவள் போல், 'என்ன அநியாயம் இது!' என்று அலறினாள்.

பட்டாசாரியர், 'எது அநியாயம்? விஷ்ணுசித்தர் தமக்கு வந்த பரிசுகளையெல்லாம் எனக்குக் கொடுத்தது அநியாயம் என்றா சொல்லுகிறாய்?' என்று பரிதாபமாய்க் கேட்டார்.

அவள் கோபத்துடன், 'அரசன் செய்தது அநியாயம், அநியாயத்தினும் அநியாயம்! அந்த ராஜதூதனைப் போல் ராஜாவும் முட்டாள், சுத்த முட்டாள்!' என்று கதறினாள், பதறினாள்,—'குறத்தி பக்கத்து அறையிலிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறாளே!' என்பதையும் மறந்து.

பட்டாசாரியார் நடுங்கிப் போனார். அவர் 'விஷ்ணு சித்தர்...' என்று ஏதோ சொல்ல வாயெடுத்ததும், ஹரிலட்சுமி கணவரை மேலே

பேசவிடாமல், 'உம்மை ராஜா அவமானப் படுத்தி விட்டார்; விஷ்ணு சித்தரும் அவமானப் படுத்தி விட்டார், தமக்கு வந்த பரிசுகளைத் தானம் கொடுப்பது போல் கொடுத்து விட்டு!' என்று இரைந்தாள்.

அந்தக் கோபவேகம் ஒருவாறு தணிந்ததும், ஒரு கொடிய பேய்த் தெய்வத்தைப் பூசாரி நோக்குவதுபோல் பரிதாபமாகத் தம்மனைவியை நோக்கினுர் ஞானப்பிரான். அப்படி அவளை நோக்கி, 'என்ன செய்வது? எல்லாம் கலிகாலத்தின் கோலம்! எட்டுத் திக்கையும் வென்று வெற்றி சூடிய பாண்டிய ராஜ சக்கிரவர்த்தி, அப்படியே திக் விஜயம் செய்யக்கூடிய பண்டித ராஜ சக்கிரவர்த்தியான என்னைத் தெரிந்து கொண்டானில்லை! சரி, சரி; அவர் எப்படி வித்வத் ஸபையில் சமாளிக்கப் போகிறுர், பார்க்கலாம், அந்தப் பௌத்த ராஜரிஷி ஆனந்த தீர்த்தர் பொல்லாத வாயாடி; "நசுக்கிவிடுகிறேன் எதிரியை அந்த ராஜஸபையிலே!' என்று உறுதி கூறியிருக்கிறுர். நான்தான் சும்மா பார்த்துக் கொண்டிருப்பேனு? என்று, வர வர வேகம் அதிகரித்தபடி பேசிவிட்டார்.

ஹரிலட்சுமி கோபம் முற்றும் தணிந்தபாடில்லை. எனினும் அவள் பேராசையுடன் அந்தப் பொன்மணிவகைகளை உள்ளறைக்குள் பதுக்கிவைக்க வேண்டுமென்று கொண்டு போய்விட்டாள். 'குறத்தி பார்த்துவிட்டால் மோசம் வந்துவிடுமே! குறவர் கூட்டம் வந்து கொள்ளையடித்துக்கொண்டு போய்விட்டால் என்ன செய்வது?' என்று தான் மடமட வென்று உள்ளே போய்விட்டாள். கணவரும் தொடர்ந்து போனுர்.

குறத்தி, 'அவசியமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களில் சிலவற்றை இப்போது நான் தெரிந்துகொண்டேன். அரசியிடம் விரைந்து போய்த் தெரிவிக்கவேணும். சரி, அந்தத் தூத வேஷத்தை அவள் கவனித்திருப்பாளா? அவர்தான் இந்த கள்ளக் கோபிகையைப் பார்த்திருப்பாரா?' என்று எண்ணமிட்ட வண்ணம் மெள்ள அறைக்கதவைத் திறந்து கொண்டு வீதியில் போய்விட்டாள்.

(தொடரும்)

கேச விருத்திக்கு சிக்கன சுலப சாதனம்
காஷ்மீர்-குஸும்
வேண்டிய எண்ணையில் கலந்து கொள்க
குடும்ப சரும-சஞ்சீவி
ஸான்டலக்ஸ்
நருமண சந்தனக்குழிம்பு
மைசூர் M.R. ஜெட்டப்பாவின்
பிரேமலீலா
உயர்தர ஊதுவத்திகள்
ஸோல்ஏஜண்டு: யுனைடெட் கன்ஸர்ன். 54. பந்தர் தெரு, மதராஸ்.1
டிப்போக்கள்:—மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய்.

பவானி ஸ்ரீ எஸ். பெருமாள் செட்டியாரின் பெண் ஸௌ. ஸகுந்தலாவுக்கும், பவானி நூல் வியாபாரியான ரா. தி. பெருமாள் செட்டியார் குமாரன் ஸ்ரீமான் வேணுகோபாலனுக்கும் சமீபத்தில் விவாஹம் நடைபெற்றது.

ஸ்ரீ கௌமார நாடி ஜோதிஷாலயம்
நெ. 2, ஹைரோட், ராயப்பேட்டை, சென்னை 14.

புராதன ஓலைச்சுவடிகளிலிருந்து இறந்தகால நிகழ்கால, எதிர்கால பலன்களை விவரமாக எழுதிக்கொடுக்கப்படுகிறது. ஜமீந்தார்களும், வியாபாரிகளும், உத்தியோகஸ்தர்களும் ஆச்சரியகரமான பலன்களின் உண்மையைக் கண்டு வியப்படைவதால் அனேக நூற்றுண்டுகளாக உலகபிரசித்திபெற்று விளங்கிவருகிறது. விவரம் விரும்புவோர் நேரில் அறியலாம்.

பண்டிட் செ. தங்கவேல் நாடார்.

சென்ற மாதம் 6-ந்தேதியன்று கங்கோதரி, ஜம்னோத்ரி, கேதார்நாத் ஆகிய புண்ய தீரங்களில் காந்திஜியின் சாம்பலைக் கரைப்பதற்காக படத்திலுள்ள விமானத்தில் சாம்பல் கலசத்தை எடுத்துச் சென்றனர். காந்திஜியின் புதல்வர் ராமதாஸ் காந்தி, ஜம்னுலால் பஜாஜின் மனைவியார், ஆகியோர் இதை எடுத்துச்சென்றனர். விமானத்தின் முன் வணங்கும் காட்சி.

(கீழ் படம்)

சாம்பலடங்கியக் கலசம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டபோது எடுத்த படம்.

மூவர்ணக் கொடி முன் செல்ல, விமானத்தில் காந்திஜியின் சாம்பல் கலசம் எடுத்துச் செல்லப்பட்டபோது இன்னொரு படம்.



திருவல்லிக்கேணி ஸ்ரீ நடராஜாக் கல்விக் கழகத்தின் மூன்ருவது ஆண்டுவிழா சென்ற 11-ந்தேதி நடந்தபோது எடுத்த படம்.

இருமல் உங்கள் சுவாசப்பையைப் பலஹீனப்படுத்தும். பெப்ஸ் கிருமிநாச சுவாச மாத்திரைகள் சாப்பிட்டு பாதுகாப்பு அடையலாம்.

வாயில் பெப்ஸ் கரைந்தவுடன் ஒரு சிறந்த சத்து வெளிப்படும். இந்த சத்து சுவாசத்துடன் உட்சென்று இருமலை நிவுத்தி, சமனமூட்டி சுவாச அடைப்பை நீக்கி மீண்டும் கிருமியினுல் பாதிக்கப்படாமல் பாதுகாக்கும்.

குளிர்ச்சி, தொண்டைப்புண், இருமல், சளி, இன்புளூயன்ஸா, பிராங்கைடிஸ் இதர மார் & சுவாச நோய்கள் நீங்கும்

ஏஜண்டுகள்:—மெஸர்ஸ்: தாதா & கம்பெனி, பி. டி., மதருஸ்.

சாப்பிடவும்

PEPS

கிருமிநாச

சுவாச மாத்திரைகள்

எப்போதும் சப்ளை வைத்திருங்கள்

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்



குகன் சோப்புகள்



சலவைக்குச் சிறந்தவை

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

பரிசு !! பரிசு !!

போலி பாக்கு தூள்களை வாங்கி ஏமாருதீர்கள்.

பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனுன **ஆர். கிருஷ்ணு** பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. N. B. 25 காலி உரை அனுப்பினுல் 50—0-0-3 பொட்டலம் இனும்.

S. M. கிருஷ்ணு அண்டு கோ.,
2-137, ஆதியப்ப நாய்க்கன் தெருவு,
மதராஸ் 1.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானுல் ரியல் அசோகா அண்டு கோ.வில் வியாபார துடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை செண்டுகளும், ஏர் ஆயில்களும், வாஸ்லின், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும், அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N. B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம் அரை சேர் பர்பியூம். கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரியல் அசோகா அண்டு கோ.,
40, கிடங்கு தெரு, மதராஸ் 1.



லோடஸ் ஹனி

சுத்தமான லோடஸ் ஹனி எல்லாவிதமான கண் வியாதிக்கும் குணம் தருவதாகும். மங்கலான பார்வை, கண்ணில் நீர் வடிதல் மற்றும் பல வியாதிகளையும் நீக்குவதுடன், முறைப்படி உபயோகித்தால் பார்வையும் தீக்ஷண்யமாகும்.

புட்டி விலை ரூ. 1-4-0.

தேசபந்து ஹர்பல் ஹோம்,
Deshbandhu Herbal Home,
7, Ganga Prasad Mukerji Road,
Bhowanipore, Calcutta 25.

உங்கள் எதிர்காலம்

பணமில்லமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணு 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,

Astrologer & Journalist, MADRAS 5.

மறுக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதருஸ்.	9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

Rgd. No. 2221.

S.A.H TRADE MARK

28 வருஷமாய் தென்னுடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

ஜீவ வசிய பரம ரஹஸ்யம்

இவ்வுலகவாழ்க்கையில் வெற்றி பெற விரும்புவோருக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும். மெஸ்மெரிஸம், ஹிப்னுடிஸம், மானிட வசியம் முதலிய சாஸ்திரங்களின் இரகசியத்தை அனுபவ சாத்தியமாக விளக்கிக்கூறும் அருமையான இரகசிய நூல். இந்நூலைப்படித்த பின் இதன் அருமையை நீங்கள் நன்குணர்வீர்கள். கண் கவரும் வனப்பு வாய்ந்த சிறந்த நூல். இதன் முன் பதிப்புக்களில் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் செலவாயிருப்பதே இதன் மேன்மையைக் குறிக்கும். இன்றே உங்கள் பிரதிக்கெழுதுங்கள்.

விலை ரூ. 4—8—0

தபாற் செலவு அணு 10.

எஸ். ஜே. புக் டெப்போ

30, சாந்தோம். : சென்னை 4.

கொழும்பில் கெய்லர் வீதி, 166 K. மதார் சாஹிப் இடமும் கிடைக்கும்.



(பான்ஸ் கோல்டு.)

பெண்களுக்கு சந்தோஷத்தை அளிக்கும் இந்த நகைகளைப் பிரதிதினமும் உபயோகித்தாலும் நிறம் மாருது. பார்ப்பவர்கள் அசல் தங்கஆபரணங்கள் என்றே எண்ணுவார்கள். கியாரண்டி உள்ளவை. 4 ஆபரணங்கள் உள்ள வெல்வெட் பெட்டியுடன் போட்டியின் பயனுக ரூ. 5-12-0க்கு அனுப்பப்படும். நகைகளின் விபரம்:- (1) நெக்லஸ் செயின் (2) இரு ஜதை வளையல் (3) லோலக் ஒரு ஜதை (4) ரேடியோ கட்டிங் மோதிரம் ஒன்று. (பேபி செயின் ஒன்று இனும்.)

அமேஜான் டிரேடிங் கம்பெனி,
1/6 சாம்பய்யர் தெரு,
சௌகார்பேட்டை, மதராஸ்.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுகைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆட்டோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285 Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில தேவையுள்ளோர் தபால் சிலவு அணு 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM
189 வக்கீல் புதுதெரு- P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SFA ST., COLOMBO.

இந்தியாவின் புகழ்

லோத்ரா

கர்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS.394

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள்:—

ஸீதாராமா
ஜெனரல் ஸ்டோர்ஸ்
பர்ஹாம்பூர்--செகந்திராபாத்
பெஜவாடா — மதுரை.

Printed and Published by S. Chakrapani Iyengar, at the "Swadesamitran" Power Press 3 & 4, White Road, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

Regd. No. 2314.

தீர்ப்பு!

"வாணி விலாஸ்"
பி. ஆர். ஸ்கொயர்,
சென்னை, டிசம்பர் 7, 1945.

இன்றைக்கு தென்னிந்தியாவில் பிரசித்திபெற்ற நகை வியாபாரிகள் தாங்கள் என்பதற்கு சந்தேகமில்லை. தங்கள் பெயர் தங்கள் வைரங்களைப்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது.

இந்தியாவின் வைரக் கலை உலகப் பிரசித்தி பெற்றது. இவ்வற்புதக் கலையில் தாங்கள் அடைந்த சில நூதன நிறைவேற்றங்கள் நினைவு படுத்திக் கொள்ளத்தகுந்தது.

தாங்கள் எப்பொழுதும், ஜாக்கிரதையாகவும், நேர்வழியுடனும் வேலைத் திறனுடனும், திருப்திகரமாகவும் வேலை செய்கிறீர்கள் என்று அத்தாட்சி கூற நான் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

தங்கள் வியாபாரம் எக்காலத்திலும் முன்னேறி இந்தியா முழுவதும் தங்கள் பெயரும், புகழும் பரவும் என்று எதிர்பார்க்கிறேன்.

வி. வி. ஸ்ரீனிவாஸ ஐயங்கார்,
பி. ஏ., பி. எல்., அட்வகேட்.

ஸுராஜ்மல்ஸ்

வைரங்கள்

313, நேதாஜி ரோட், : : சென்னை.